மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00.


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதின்னான்கு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 புரட்டாதி 24 சனிக்கிழமை (10.10.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 295



## சமாதானத்திற்கான நோபல் பரிசு இம்முறை பராக் ஒபாமாவுக்கு!

(ஒஸ்லோ)

2009 ஆம் ஆண்டு சமாதானத்திற்கான நோபல் பரிசு அமெரிக்க ஜனாதிபதி பராக்.ஒபாமாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒபாமா அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டு ஒரு வருடம் கூட பூர்த்தியாகாத நிலையில் அவருக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது.

அணு ஆயுதம் இல்லாத உலகம் (14 ஆம் பக்கம் பார்க்க)

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்க முயற்சி

(கொழும்பு)

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிக்கும் நோக்கில் பொது வேட்பாளர் ஒருவரைக் களத்தில் இறக்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராகி வருவதாக அந்தக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்திக் கூறியுள்ளதாகவும் இது தொடர்பாக எதிர்வரும் சில தினங்களில் அவர் விசேட அறிவிப்பொன்றை வெளியிடவிருப்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் (14 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழக எம்.பிக்கள் அடங்கிய குழு நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம்

## யாழ்.நிலைமைகள் குறித்துக் கேட்டறிவர்

(யாழ்ப்பாணம்)

முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களின் நிலைமைகளை அறிந்து கொள்வதற்காக இன்று இலங்கைக்கு வரும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பத்துப் பேர் அடங்கிய குழுவினர் நாளை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றனர்.

இவர்கள் யாழ்ப்பாணத்தில் பல்வேறு தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்தவுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இந்தியத் தூதுவரும் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கின்றார். (14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் அமைப்பை மீளக் கட்டியெழுப்ப சதி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது

### ★ பாதுகாப்புச் செயலர் தெரிவிப்பு ★

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பை மீள கட்டியெழுப்ப சதி மேற்கொள்ளப்படுவதாகப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாதுகாப்புச் செயலர் ரூபவாஹினிக்கு வழங்கிய விசேட செவ்வியில் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

பயங்கரவாதத்தை நாட்டிலிருந்து இல்லாமல் செய்வதாகக் கூறியே 2005 ஆம் ஆண்டில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகப் பதவியேற்றுக் கொண்டார் (14 ஆம் பக்கம் பார்க்க)

## 103 கர்ப்பிணித் தாய்மார்கள் இன்று அழைத்து வரப்படுவர்

(யாழ்ப்பாணம்)

வவுனியா நலன்புரி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 103 கர்ப்பிணித் தாய்மார்களும் குடும்ப உறுப்பினர்களுமாக 418 பேர் இன்று யாழ்ப்பாணத்திற்கு அழைத்து வரப்படுவார்கள் என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

அத்துடன் தீவகத்தைச் சேர்ந்த 650 பேரும் இன்று வவுனியா நலன்புரி முகாம்களிலிருந்து அழைத்துவரப்படுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு அழைத்து வரப்படும் தீவகத்தைச் சேர்ந்த மக்கள் வேலணை, காரைநகரில் உள்ள (14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் தலைவர் பிரபாகரனின் ஆவி கூட இலங்கையை ஆள அனுமதிக்க மாட்டோம்!

### ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உரை



(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் ஆவி கூட இலங்கையை ஆள்வதற்கு ஒருபோதும் அனுமதிக்க முடியாதென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அதிகரித்து வரும் அனைத்துலக அழுத்தங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது, (14 ஆம் பக்கம் பார்க்க)



## தமிழர்களின் உணர்வை வெளிப்படுத்த அனைவரும் அணிதிரள வேண்டும்

### அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு

(யாழ்ப்பாணம்)

எமது அயல் நாட்டின் தொப்புள் கொடி உறவுகளான தமிழக மக்களுக்கும் இந்திய மக்களுக்கும் எமது உறவின் உணர்வுகளை வெளிப்படுத்த அனைவரும் ஒன்று திரண்டு வரவேண்டும் என சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா யாழ்.குடாநாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

டி.ஆர்.பாலு, (14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் இலக்கிய விழா-2009 இறுதி நாள் நிகழ்வு இன்று

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்தும் தமிழ் இலக்கிய விழா-2009 இன் இறுதி நாளான இன்று பிற்பகல் 1.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் செ.இராசநாயகம் முதலியார் அரங்கில் நடைபெறும் இறுதி நாள் நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் பிரமாண்டமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறைச் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் மேஜர் (14 ஆம் பக்கம் பார்க்க)

இவற்றின் சிறப்பம்சங்கள்

ASP ENTERPRISES

யாழ் மண்ணில் புதியதோர் உதயம்

# பெற்றோல் செலவில்லை
# குறைந்த எடை & நீண்ட பாவனை
# இலகுவாக மிதித்துச் செல்லலாம்
# இலகு தொழில்நுட்பத்துடன் அமைந்தது
# எட்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து மின்னேற்றினால் 60~70Km வரை பயணம் செய்யலாம்
# பற்றரிக்கு ஒரு வருட உத்தரவாதம்
# ஒரு Km க்கான செலவு 0.15 சதம் மாத்திரமே

மின்சார சக்தியில் இயங்கும் புதிய

Electric Bicycles

விற்பனையாகின்றன.







மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாட வேண்டிய இடம்



கத்தோலிக்க அச்சக கடைத்தொகுதி
360/9, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(பஸ்ரியன் சந்திக்கு அருகாமையில்)
(3706-இ) தொலைபேசி - 0213001585, 0776079352





உலக அஞ்சல் தின நிகழ்வு யாழ். பிராந் திய அஞ்சல் திணைக்களத்தினால் நேற்று கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மதுமதி வசந்தகுமார், வடமாகாண பிரதி அஞ்சல் மா அதிபர் வி.குமரகுரு ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்களையும் மேல் உள்ள படத்திலும் பிரதி அஞ்சல் மா அதிபர் குமரகுரு உரையாற்றுவதையும் நிகழ் வில் கலந்து கொண்டவர்களையும் மற் றைய படங்களிலும் காணலாம்.

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

'இளைஞர்களுக்கான நாளை' உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 4 மணிக்கு துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறும் போட்டியில் சென் அன்ரனிஸ் அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் போட்டியில் சென் பீற்றர்ஸ் அணியும் இமையாளன் மத்தி விளையாட்டுக்கழக அணியும் மோதவுள்ளது. (ச-3)

## வன்னியிலிருந்து வந்தவர்களின் கடற்றொழில் உபகரணம் கையளிப்பு

(வவுனியா)

வன்னியில் இடம்பெற்ற யுத்தத்தின் போது மாத்தளன், புதுமாத்தளன், முள்ளிவாய்க்கால் மற்றும் முல்லைத்தீவு பகுதிகளிலிருந்து படகுகள் மூலம் முனைப் பகுதிக்குத் தப்பி வந்தவர்களில் ஒருசிலரது படகுகளும், வெளியிணைப்பு இயந்திரங்களும் நேற்றையதினம் உரிமையாளர்களிடம் கடற்படையினரால் கையளிக்கப்பட்டன.

ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாய கமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வட மராட்சிப் பிரதேசக் கடற்படை அதிகாரிகளுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நேற்றைய தினம் அமைச்சரின் முன்னிலையில் கடற்படையினரால் மேற்படி படகுகளும், வெளியிணைப்பு இயந்திரங்களும் கையளிக்கப்பட்டன. (ச)

## வைப்புச் செய்தால் பரிசில்கள்

(யாழ்ப்பாணம்)

ஆனைக்கோட்டை பிடாரி அம்மன் கோவிலடி உப தபால் அலுவலகத்தில் இன்று சனிக்கிழமை புதிதாக கணக்குகளை ஆரம்பிப்பவர்களுக்கு யாழ். தபால் நிலைய தேசிய சேமிப்பு வங்கியினரால் பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக பிடாரி அம்மன் கோவிலடி உப தபாலக தபாலதிபர் திருமதி தயாஉசா இராஜ்குமார் அறிவித்துள்ளார். (ச-14)

## 1500 மெ.தொ.மா கப்பலில் எடுத்து வரப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு ஆயிரத்து 500 மெற்றிக் தொன் மா கப்பலில் எடுத்துவரப்படவுள்ளதாக யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். இதுதொடர்பில் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவித்ததாவது;

யாழ்.மாவட்டத்திற்கு ஏ-9 வீதியூடாக லொறிகளில் மா எடுத்துவரப்படுவது நிறுத்தப்பட்டு அத்தியாவசிய ஆணையாளரின் ஆலோசனைக்கு அமைவாக கப் பல் மூலம் திருகோணமலையிலிருந்து எடுத்துவரப் படவுள்ளது.

இதில் முதல் கட்டமாக ஆயிரத்து 500 மெற்றிக் தொன்மா எடுத்துவரப்படுகிறது. இவ்வாறு எடுத்து வரப்படும் மா விலை குறைவாக இருப்பதனால் யாழ்ப்பாணத்தில் தற்போது நிர்ணயிக்கப்பட்டுள்ள மாவின் விலை குறைக்கப்படும் எனவும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் குறிப்பிட்டார். இதேவேளை பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் தற்போது வழங்கப்பட்ட மாவினை தனியாருக்கு வழங்கிவிட்டு தரம் குறைந்த மாவினைப் பெற்று அரச அதிபர் நிர்ணயித்த விலையில் பொது மக்களுக்கு விற்பனை செய்யப்படுவதாகக் கூறப்படுகிறது. (ச-5)


தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

மாபெரும் மலிவு விற்பனை

10.10.2009-17.10.2009

| | |
|---|---|
| கொட்டன் பிறின் | 90/= |
| பிறின் சாறிகள் | 500/= |
| டஸ்ட் சாறிகள் | 1000/= |
| BOX சேட் | 400/= |
| T- சேட் | 300/= |
| ரவுசர் | 300/= |
| ரவுசர் | 700/= |
| கொட்டன் பஞ்சாபி (துணி) | 750/= |
| ஸ்கேட் & பிளவ்ஸ் | 350/= |
| BOY சூட் | 200/= |
| வெல் வெற் | 100/= |
| சோட்ஸ் BOYS | 50/= |
| பஞ்சாபி | 300/= |



மேலும், கொட்டன் சாறி, கோலம், பனாறஸ் சாறிகள் விசேட கழிவில் விற்பனையாகிறது.

கணேசன் சென்ரர்

கே. கே. எஸ். வீதி [வைத்தியசாலை முன்பாக] இணுவில்.

(C-3475)


## புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை**

(யாழ்ப்பாணம்)

ம.தேன்நிலா (179), சி.மகிழ்நன் (167), வி.ஜெனோஷா (166), லோ.மதுமிலா (165), பா.தசீவன் (165), ஸ்ரீ.குமரகுலன் (164), ஈ.நந்தலக்ஸன் (160), ர.கிருஸ்ணமீரா (160), வி.விமலினி (160), பா.றிஸ்மி (160), மு.பிரவீன் (158), கி.கஜரூபன் (157), சூ.பிறீதா (157), சி.சிவானுஜன் (156), தி.சதுர்ஜன் (156), மோ.அபிலாசினி (156), உ.சாம்பவி (155), ஸ்ரீ.குகாயினி (155), ஞா.அபிஷாயினி (155), அ.எட்றின்வூட் (155), த.ஈழநிலா (155), த.நித்திலன் (154), சு.ஜனார்த்தன் (153), கு.இன் பநேசன் (153), ம.செந்தூரன் (153), ர.அபிநயன் (152), பா.சாதனா (151), பா.சுதர்ஸன் (151), தி.சதுர்ஸன் (150), கே.வைஸ்ணவி (150), இ.விதுர்ஷன் (149), சு.லக்ஸன் (148), வி.சக்திஹறா (148), ம.கீதப்பிரியா (147), ச.திவேசன் (146), ஜெ.அபிராமி (146), கி.கேசாயி (145), ரா.வர் சிகா (144), ந.சஞ்சீவ் (144), செ.தட்ஷா (144), க.தனுஜா (144), பா.ஜக்ஷாயினி (143), ப.நிஷாந்திகா (143), ம.ஜீனூஷா (143), ர.பிரிந்தா (143), கு.விருட்ஷிகா (143), ம.செள மிஜா (141), ஜெ.தேனுஜன் (140), அ.டினேஸ் (140), பா.ரபித்தனா (140)

இப் பரீட்சைக்குத் தோற்றிய 120 மாணவர்களில் சித்திபெற்ற மாணவர்களைத்தவிர 56 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர்.

**கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாலயம்.**

லிரோயா தங்கராசா (153), காயத்திரி ஆனந்தன் (145).

**ஏழாலை வடக்கு அ.த.க.பாடசாலை.**

நி.தேனுசன் (154).

தோற்றிய மாணவர்களில் சித்திபெற்றவரைத்தவிர மேலும் இருவர் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். (ச)

## பண்பாட்டு பேரணியை முன்னிட்டு அரசடி வீதி இன்று மூடப்படும்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தமிழ் இலக்கிய விழாவின் இறுதி நாளான இன்று பிற்பகல் ஒரு மணிக்கு இடம்பெறவுள்ள. பண்பாட்டுப் பேரணியை முன்னிட்டு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து அரசடி வீதியூடாக யாழ். இந்து மகளிர் கல்லூரி வரை வீதித்தடை ஏற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் பண்பாட்டுப் பேரணிக்காக நல்லூர் ஆலயத்திலிருந்து அரசடிச் சந்தி வரையான வீதி இன்று பிற்பகல் ஒரு மணியிலிருந்து சில மணிநேரம் மூடப்பட்டிருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் குறித்த நேரத்தில் மாற்று வீதியூடாக பயணத்தை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச-5)


மாட்டு வண்டி சவாரிப் போட்டி

கொத்தத்துறை பொன்னாலை வீதியில் மாபெரும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி நாளை 11.10.2009 ஞாயிற் றுக்கிழமை இடம்பெற இருப்பதால் அனை வரையும் அன்புடன் அழைக்கி றோம்.

-மூளாய்க்கிளி

(C-3474)



காணி விற்பனைக்கு

பலாலி வீதி, யாழ். நகரில் (இலுப்பையடி சந்திக்கு அண்மையில்) கடை, வீடு, நல்ல தண்ணீர் கிணற்றுடன் 2 1/2 பரப்பு காணி மூன்று பக்க மதில்களுடன் விற் பனைக்கு உண்டு.

தொடர்பு:
திருமதி இராஜேஸ்வரி.து
புது இலக்கம் 33, பலாலி வீதி,
யாழ்ப்பாணம். (3757)


## முன்பள்ளிகளின் கண்காட்சிக்கு அனைவருக்கும் அழைப்பு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண முன்பள்ளிகளின் கண் காட்சியும் கலை விழாவும் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

இக்கண்காட்சி மற்றும் கலை விழாவில் சகல முன்பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி சாரணிய மாணவர்கள் அனைவ்ரையும் கடமையில் ஈடுபடுமாறும் யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார். (ச-14)


MIS கணனிக்கல்வி நிறுவனம்

Computer Courses

1. Computer Programming
2. Multimedia Technologies
3. Hardware Technology
4. Desktop Publishing
5. Graphics Designs
6. Web Technologies

Mr.R.Kumaran - B.Sc. (Computing & IS)

இராமநாதன் வீதியிலிருந்து 150m தூரம் அல்லது K.K.S வீதியிலிருந்து 200m தூரம்

# 74, Sabapathy Lane, Thalaiyali, Pirampady, Jaffna

TPNO : 0213216083, 0776577359

## சீனாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் பயங்கர விபத்து ; 26 பேர் பலி

மத்திய சீனாவின் ஹுனன் பகுதியில் நிலக்கரி சுரங்கம் உள்ளது. அங்கு நேற்று முன்தினம் திடீரென விபத்து ஏற் பட்டது.

தகவல் அறிந்ததும் மீட்புப் படையினர் விரைந்து சென்றனர். அதற்குள் 19 பேர் உயிரிழந்தனர். மற்றவர்களை மீட்டு வெளியே கொண்டுவந்தனர். அவர்களில் மேலும் 7 பேர் பலியாகினர். இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியது.

சீனாவில் உள்ள நிலக்கரிச் சுரங்கங்களில் இது போன்ற விபத்து அடிக்கடி ஏற்படுகிறது. கடந்த ஆண்டில் மட்டும் இதுபோன்ற விபத்தில் 3 ஆயிரத்து 200 பேர் இறந்துள்ளனர். (ஓ-6)

## சர்வதேச நீதிமன்றத்தில் படையினரை நிறுத்தும் முயற்சிகள் தொடர்பான கருத்துக்களில் உண்மையில்லை

### —ஜே.வி.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் இலங்கைப் படையினரை ஆஜர்ப் படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாக அரசாங்கம் தெரிவித்து வரும் கருத்துக்களில் உண்மையில்லை என தொழிற் சங்கத் தலைவரும், ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினருமான கே.டி.லால்காந்த தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் மக்களிடம் எதிர்நோக்கி வரும் நெருக்கடி நிலைமைகளை மூடி மறைக்கும் நோக்கில் ஜனாதிபதி இவ்வாறான ஓர்கதையை அவிழ்த் துவிட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையைச் சேர்ந்த எவரையும் சர்வதேச நீதிமன்றில் ஆஜர் படுத்த முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.ம்க்களை ஏமாற்றி அதன்மூலம் அரசியல் நடத்தும் கபட நோக்கமே இந்த சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் குறித்த பீதி என அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்வோர் சிறையில் அடைக்கப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இரண்டாண்டுகளுக்கு முன்னதாக ஏன் ஜனாதிபதி தேர்தலை ஜனாதிபதி நடத்தவேண்டுமென அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஏனெனில் இன்னும் சில காலங்களின் பின்னர் மக்கள் உண்மை நிலையை அறிந்து கொள்வார்கள் எனவும் அப்போது ஆளும் கட்சியினரால் ஒருபோதும் தேர்தல்களில் வெற்றிபெற முடியாத நிலை உருவாகும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

குடும்ப அரசியலை வலுப்படுத்திக்கொள்ளும் நோக்கில் தற்போது நாட்டின் சில சட்ட திட்டங்களும் மாற்றியமைக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (ஓ-6)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
61, Kachcheri-Nallur Road, Jaffna
Phone: 021 2228093 - E-mail: alliancejaffna@yahoo. com
Learn French the French Way
French Classes
Alliance Francaise de Jaffna இன் ஊடாக சர்வதேச மொழியான பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் உள்நாட்டு, வெளிநாட்டு விரிவுரையாளர்கள் மூலம் கற்பிக்கப்படுகின்றன.
சிறுவர்கள், மாணவர்கள், அலுவலர்கள், வெளிநாடுகளில் உயர்கல்வி கற்க விரும்புவோர், ஆசிரியர்கள் மொழி பயில ஆர்வமுள்ள எவரும் கற்கலாம்.
*வகுப்புக்கள் சனி, ஞாயிறுகளில்*
*புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.*
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்களை நேரில்/தொலைபேசியினூடாகப் பெறலாம்.
(3637)

2009-தரம்: 5 புலமைப்பரிசில் பரீட்சை வெற்றித்தேர்வு வெற்றியாளர்களுக்கான
மாபெரும் கௌரவிப்பு விழா NSB
மக்கள் வங்கியின் மகத்தான பதக்கம்
தேசிய சேமிப்பு வங்கியின் ஞாபகார்த்த பரிசுடன் கூடிய வைப்புப் புத்தகம்
பெறுமதியான சான்றிதழ் இன்னும் பல பரிசுகளோடு

சித்திபெற்றோரில் 100பேருக்குப் "பாராட்டு விழா" பாடசாலை அதிபரின் உறுதியுரையுடன் பாடசாலைப் பெயர், மாணவர்பெயர் பெற்ற புள்ளிகள், தபால் விலாசம், தொலைபேசி இலக்கம் என்பவற்றுடன் உடன் விண்ணப்பித்து கௌரவிப்பு பெறுங்கள்.
(C/3470)

அனுப்பவேண்டிய முகவரி : மாவட்ட இணைப்பாளர். வெற்றித்தேர்வு.
392. நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 021 222 9016
வெற்றித்தேர்வு பரீட்சையை தொடராகச் செய்து தேசிய மட்டத்தில் சாதனை படைத்த இவர்களுக்கு எமது பாராட்டுக்கள்

ப.கஸ்தூரி-188 இவர்களுடன் சாதனை அதிபர் திரு.கே.தவயோகராசா அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள் லோ.ஸ்ரீகர்சன்-192

## கொழும்பு உட்பட 10 பிரதேசங்களில் எலிக்காய்ச்சல் அபாயம்

(கொழும்பு)

கொழும்பு உட்பட 10 பிரதேசங்கள் எலிக்காய்ச்சல் ஏற்படக் கூடிய பிரதேசங்களாக இனங் காணப்பட்டிருப்பதாக சுகாதாரத் திணைக்களத்தின் தொற்று நோய்ப் பிரிவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உடல்முழுவதும் வலி ஏற்படுவதும், தலைவலி உடனான கடும் காய்ச்சலும் இந்நோய்க்கான அறிகுறிகளாகும் என்று இந்தப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பவா பாலிக்க வர்த்தன கூறியுள்ளார்.

இந்த அறிகுறிகள் காணப்பட்டால் அரசாங்க வைத்தியர் ஒருவரை சந்தித்து சிகிச்சை பெறுவது அவசியம் என்றும் அவர் கூறினார். கடந்த 9 மாத காலத்தில் ஆயிரத்து 400 பேருக்கு எலிக்காய்ச்சல் ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களில் 118 நோயாளிகள் இறந்துள்ளனர். வயல்க ளில் நீர் தேங்கி நிற்கும் பகுதிகளை உழும் பொழுது பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்று தெரிவித்துள்ளார். (ஓ)

# ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப வருடம்-2009
# சமகால தகவல் தொழில்நுட்பம் -நூல் வெளியீடு

## அரச அதிபரின் ஆசிச்செய்தி



இன்றைய இலத்திரனியல் யுகத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு மிக இன்றியமையாததொன்றாகவுள்ளது.தற்போது அநேகமான பாடசாலை மட்டங்களில் இந்த அறிவு போதிக்கப் பட்டு வருகின்றது. ஏனெனில் எதிர்கால சவால் களுக்கு ICT ஊடாகவே முகம்கொடுக்க வேண்டியுள்ளது. குறிப்பாக பொதுத்துறை நிறுவனங்களில் இன்று அனைத்து செயற்பாடுகளும் கணனியூடாகவே மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்பாடலுக்காக இணையம்,மின்னஞ்சல் ஆகியன பயன் படுத்தப்படுகின்றன. இதனூடாக அரச சேவையினைக் காத்திரமாக வழங்க முடிவதுடன் எதிர்காலத்தில் இலத்திரனியல் நிர்வாகக் கட்டமைப்பு மேலும் விஸ்தரிக்கப்படும் என்பதில் எனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை உண்டு.


"சமகால தகவல் தொழில்நுட்பம்" எனும் நூலின் நூலாசிரியர் திரு.சீ.செல்வநாயகம் அவர்களின் ஆக்கமானது ஆங்கில மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான இவ்வாண்டில் மிகப் பயனுறுதி வாய்ந்ததாக அமையும்.மிகப் பயன்பாடான கட்டுரைகளுடன் மாணவர்களுக்கான ஆக்கங்களை தாங்கிவருவது பாராட்டுதற்குரியது.இந்நூலின் ஆக்கத்திற்கு அயராது உழைத்த நூலாசிரியரை நான் மனதார வாழ்த்துவதுடன் அவரது நூலாக்கப் பணி தொடர்ந்து சிறக்க எனது மனமார்ந்த ஆசிகள் உரித்தாகட்டும்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர் / மாவட்டசெயலர், யாழ்ப்பாணம்.




நூலாசிரியர்:
திரு.சீவரட்ணம் செல்வநாயகம்
(விரிவுரையாளர் -தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்)

## சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை கௌரவ அமைச்சர் அவர்களின் ஆசிச்செய்தி



அதி வேகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற உலகத்தின் முன் இலத்திரனியல் சார்ந்த துறையானது தொலைத்தொடர்பு பரிமாற்றங்களின் போது முக்கிய இடத்தை வகித்து வருகின்ற நிலையில் இத்துறை சார்ந்த தொழில்நுட்ப அறிவானது இன்றியமையாத ஒன்றாக அமைந்துவிட்டது.

இலத்திரனியல் வலைப்பின்னலின் ஊடாகவே பல்வேறு கருமங்களையும் ஆற்ற வேண்டியதொரு நிலையில் இன்று நாம் வாழ்ந்து வருகின்றோம்.

இந்த நிலையில் திரு.சீ.செல்வநாயகம் அவர்களின் 'சமகால தகவல் தொழில்நுட்பம்' எனும் தலைப்பில் இந்நூலை வெளியிடுவது காலத்திற்கு பொருத்தமானதொரு முயற்சியாகும்.

இந்நூலாசிரியரின் பணியினைப் பாராட்டுவதுடன் ஆசியினையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

டக்ளஸ் தேவானந்தா பா.உ.
சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர்.

## முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



இன்றைய நவீன உலகில் " தகவல் தொழில் நுட்பம்" என்பது வேகமாக வளர்ந்து வரும் ஒரு கற்கைநெறிகளும் ஆரம்பக் கல்வியிலிருந்து மூன்றாம் நிலைக் கல்வி வரை எல்லோருமே கற்றுக் கொள்ளவேண்டும் என்ற அறிவியல் துறையாக தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் மாறியிருப்பதே அதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

இலங்கையிலும் பாடசாலை மட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் இத்துறையின் வளர்ச்சிக்காக அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துவருவதுடன் இலங்கை வாழ் மக்கள் அனைவருமே தகவல் தொழில்நுட்பம் தொடர்பான கேள்விஞானம் கொண்டவர்களாக மாறுவதற்கும் வகை செய்துள்ளது.தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பூரண உள்ளடக்கத்தைக் கொண்ட நூலானது இல்லையென்ற குறைபாட்டை தவிர்க்க வெளிவந்திருப்பதே நூலாசிரியர் திரு சி.செல்வநாயகம் அவர்களால் எழுதப்பட்ட "சமகால தகவல் தொழில்நுட்பம்" எனும் இந்நூலாகும்.

தகவல்தொழில்நுட்ப அறிவைப் பெருக்கவேண்டும் என்ற ஆவல்கொண்ட நூலாசிரியரினை பாராட்டுவதுடன் மேலும் பல நூல்களை தகவல் தொழில்நுட்பம் தொடர்பாக வெளியிட வேண்டும் என்ற வாழ்த்தினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.க.தேவராஜா,-- பீடாதிபதி
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம் ,யாழ்.பல்கலைக்கழகம்.

(C/3469)

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமானது இன்று மிகவும் துரிதமாக வளர்ந்து வருகின்ற ஓர் துறையாகும்.

இன்றைய நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப யுகத்தில் இக்கல்வி மிக இன்றியமையாததாகவுள்ளது.

இத்துறை சார்ந்த பாடங்கள் கல்வித் திட்டத்தில் இணைக்கப்பட்டு போதிக்கப்பட்டு வருகின்றது.

இன்று ஆசிரியர்கள், மாணவர்களுக்கு இத்துறை சார்ந்த பல்வேறு செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம்.

அந்த வகையில் திரு.சி.செல்வநாயகம் அவர்களின் இந்நூல் அனைவரிற்கும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் தேவையை நிறைவு செய்யக் கூடியதாகவுள்ளது.

இத்துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட நூலாசிரியரினை பாராட்டுவதோடு எமது கல்வி வலயத்தின் சார்பிலும் என் சார்பிலும் மனமுவந்த பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி. அ. வேதநாயகம்
வலயக் கல்விப் பணிப்பாளர்
வலயக் கல்வி அலுவலகம்; யாழ்ப்பாணம்.

# வட மாகாண தமிழ் இலக்கிய விழா-2009-2ஆம் நாள் நிகழ்வுகள்




தமிழ் இலக்கிய விழா இரண்டாம் நாள் நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், அவர்கள் மங்கல விளகேற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண் டவர்களையும் படங்களில் காணலாம்.

## இடம் பெயர் மக்களுக்கான உதவிகளை பிரிட்டன் நிறுத்தினாலும் ரஷ்யா தொடர்ந்து வழங்கும்



(கொழும்பு)

பிரிட்டன் இடம்பெயர் மக்களுக்கான உதவிகளை நிறுத்திக் கொள்ள உத்தேசித்துள்ள போதிலும் ரஷ்யா உதவிகளை வழங்குவதாக மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்ளதுள்ளார்.

குறிப்பாக வடக்கு இடம் பெயர் முகாம்களில் தங்கியுள்ள பொதுமக்களுக்கு தேவையான நிவாரணப் பொருட்களை வழங்குவதற்கு ரஷ்யா இணக்கம் தெரிவித்துள்ளது.

ரஷ்ய அரசாங்கத்தினால் வடக்கு அகதிகளுக்கு ஒரு தொகுதி நிவார ணப் பொருட்களை வழங்கும் உத்தி யோக பூர்வ நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு இடம்பெயர் முகாம்க ளில் தங்கியுள்ள மக்களுக்காக பல நாடுகள் உதவிகளை வழங்கி வருவ தாக அவர் தெரிவித்துள்ளார்.

ஏதேனும் ஓர் காரணத்திற்காக உதவிகள் நிறுத்தப்பட்டாலும் வடக்கு அகதிகளுக்கு தொடர்ச்சியாக அர சாங்கம் உதவிகளை வழங்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

கண்ணிவெடி அகற்றும் இர ண்டு ரஷ்ய நிபுணர்களும் இலங் கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

(ஓ-6)



## இன்று ஒரு தகவல்

# மன்னிப்பு

ஒரு சண்டையை ஆரம்பிப்பது சுலபம். அதை நிறுத்துவதுதான் கஷ்டம். இரண்டு பேர் சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அதை நிறுத்த வேண்டுமானால், அந்த இருவரில் யாராவது ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும். அடுத்தவரை மன் னிக்க வேண்டும். அப்போதுதான் அந்தச் சண்டை ஓயும். இல்லாவிட்டால் அது ஓயாது.

இயேசுக் கிறிஸ்துவின் சீடர்களில் ஒருவன் பீற்றர். அவன் ஒரு சமயம் தன்னுடைய சகோதரனுடன் சண்டை போட்டுக் கொண்டிருந்தான்.

அவன் இயேசு நாதரிடம் சென்று "என்னுடைய சகோதரனை நான் எத்தனை தடவை மன்னிக்க வேண்டும்? ஏற்கனவே ஏழுதடவை மன்னித்திருக்கிறேன்" என்றான்.

அதற்கு இயேசுபிரான் "உன்னுடைய சகோதரனை நீ எத்தனை தடவை மன்னிக்க வேண்டும் என்பதற்கு அளவு எதுவும் கிடையாது. எப்போதெல்லாம் உன்னுடைய சகோதரன் கோபமடையச் செய்கிறானோ அப்போதெல்லாம் நீ அவனை மன்னிக்க வேண்டும்" என்றார்.

இந்தப் பதில் பீற்றருக்கு இன்னும் குழப்பத்தை அதிகப்படுத்தியது. தெளிவு ஏற்படவில்லை. அப்போது இயேசுபிரான் பீற்றருக்கு இந்தக் கதையைக் கூறினார்.

ஓர் ஊரில் ஒரு ராஜா இருந்தார். ஒருநாள் அவர் உட்கார்ந்து அரண்மனைக் கணக்கு வழக்குகளைச் சரி பார்த்துக் கொண்டிருந்தார். அப்போது அவருக்கு ஒரு விடயம் தெரிய வந்தது.

அதாவது அரண்மனை சேவகன் ஒருவன் பத்தாயிரம் பொற்காசுகள் அரண்மனைக்குச் செலுத்த வேண்டியிருந்தது. எப்போதோ அவன் அதைக் கடனாக வாங்கி இருக்கிறான். இன்னும் திருப்பிக் கொடுக்கவில்லை.

உடனே அரசர் அந்த சேவகனைக் கூப்பிட்டு, "இதோ பாரப்பா... நீ அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய பத்தாயிரம் பொற்காசுகளைத் திருப்பிக் கொடுத்துவிடு. அப்படிக் கொடுக்க முடியாவிட்டால் உன்னையும் – உன் மகனையும் – குழந்தைகளையும் – உன்னிடம் இருக்கும் பொருட்களையும் விற்று அரசாங்கக் கடனைத் தீர்த்துக் கொள்கிறேன்" என்றார்.

அந்த சேவகன் பார்த்தான்... வேறு வழியே இல்லை. உடனே அரசரின் காலில் பொத்தென்று விழுந்தான். 'என் மீது கருணை காட்டுங்கள் அரசே!" என்று வேண்டிக் கொண்டான். அரசருக்கு அவன்மீது கருணை பிறந்தது.

"சரி! எழுந்திரு! நான் உன்னை மன்னிக்கிறேன். நீ எதையும் திருப்பிச் செலுத்த வேண்டாம்! போய்வா!" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்தார்.

சேவகன் சந்தோஷமாகப் போய்க் கொண்டிருந்தான்.

வழியில் இவனிடம் ஏற்கனவே பத்துப் பொற்காசுகள் கடன் வாங்கியிருந்த இன்னொருவன் வந்து கொண்டிருந்தான். அவனை இவன் பிடித்துக்கொண்டு "என்னிடம் வாங்கிய கடனை இப்போதே திருப்பிக் கொடு" என்று கேட்டான்.

இவன் வாங்கிய பெரிய கடனையே அரசர் மன்னித்து விட்டார். ஆனால் இவனிடம் இன்னொருவர் வாங்கிய சிறிய கடனை இவன் இப்போது மன்னிக்கத் தயாராக இல்லை.

அந்த ஆள் "இன்னும் சில நாட்களில் தருகிறேன்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான் கெஞ்சினான்.

ஆனால் இவன் அதைக் கேட்கவில்லை.

நீதிமன்றத்துக்குப் போனான். நீதிபதி விசாரித்தார். பத்துப் பொற்காசுகளையும் திருப்பிக் கொடுக்கும் வரையில் அவனுக்கு சிறைத் தண்டனை என்று தீர்ப்பளித்தார்.

இந்த விடயத்தை அரண்மனைச் சேவகர்கள் சிலர் கேள்விப்பட்டு அரசனிடம் தெரிவித்தனர்.

உடனே ராஜா தன்னிடம் கடன் வாங்கியவனை அழைத்து வரச் சொன்னார். அவன் வந்தான். ராஜா அவனிடம், "இதோ பாரப்பா... உன்னிடம் கடன்பட்டவனை மன்னிப்பதற்கு நீ தயாராக இல்லை. அதனால் நானும் உன்னை மன்னிக்கத் தயாராக இல்லை. உனக்கும் இப்போதே அதே தண்டனையைக் கொடுக்கிறேன். பத்தாயிரம் பொற்காசுகளைக் கொடுக்கும் வரை நீயும் சிறையிலேயே இரு" என்று சொல்லிவிட்டார்.

இதுதான் இயேசுநாதர் பீற்றருக்குச் சொன்ன கதை.

ஒரு தவறு செய்துவிடுகிறோம். நாம் செய்தது தவறு. இனிமேல் அதுபோன்ற தவறு செய்யக்கூடாது என்று முடிவு செய்கிறோம். அப்படிச் செய்தால் தான் ஆண்டவனிடம் மன்னிப்பு கேட்கும் தகுதி நமக்குண்டு என்று அர்த்தம்.

நாம் இன்னொருவரை மன்னிக்கத் தயாராக இல்லாத போது, நம்மை மட்டும் இன்னொருவர் மன்னிக்க வேண்டும் என்று நினைப்பது எந்த விதத்தில் நியாயம்?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகம், பாடசாலை மாணவர்கள், முன் பள்ளி மாணவர்கள், மாற்று வலுவுள்ளோர் ஆகியோருக்கான போட்டிகளை நடத்தவுள்ளது.

இதில் மாணவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களின் பெயர் விபரங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கொக்குவில் பொது நூலக நூலகர் கேட்டுள்ளார்.

போட்டிகள் பற்றிய விபரம் வருமாறு,

**கவிதை உருவாக்கலும், வாசித்தலும்**

இப்போட்டி தரம் 6-8, 9-11, 12-13 என 3 பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது. இதற்கான கவிதைகள் நான்குவரியையும், 5 பந்தியையும் கொண்டதாக அமைந்திருத்தல் வேண்டும்.

இதன் தலைப்பு போட்டி மண்டபத்தில் வாசிப்பும் நூலகமும் சார்பானதாக வழங்கப்படும்.

**கட்டுரை**

இப்போட்டியும் 3 பிரிவுகளில் நடத்தப்படவுள்ளது. தரம் 12 – 13 பிரிவிற்கான கட்டுரை "வாசிப்புத்திறனை ஊக்குவிப்பதில் நூலகத்தின் பங்கு' எனும் தலைப்பில் ஆயிரத்து 500 சொற்களுக்கு குறையாமலும் தரம் 9–11 பிரிவுக்கான கட்டுரை 'அறிவினை விருத்தி செய்யும் அறிவாலயம் எனும் தலைப்பில்' ஆயிரம் சொற்களுக்குக் குறையாமலும் தரம் 6–8 பிரிவிற்கான கட்டுரை "வாசிப்பு வழங்கும் மொழியறிவு" எனும் தலைப்பில் 500 சொற்களுக்குக் குறையாமலும் அமைந்திருத்தல் வேண்டும்.

**பேச்சு**

இப்போட்டி தரம் 01–05 வரையான மாணவர்களுக்கு நடைபெறவுள்ளது.

வாசிப்பினால் வளம் பெறுவோம், நூல்களில் எம் அறிவு, புத்தகம் ஒரு பொக்கிஷம் எனும் தலைப்பில் விரும்பிய தலைப்பினைத் தெரிவு செய்து 10 நிமிடங்கள் பேச வேண்டும்.

எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு அத்துடன் முன்பள்ளி மாணவர்களுக்கான போட்டிகளும் பிற்பகல் 2 மணிக்கு மாற்று வலுவுள்ளோருக்கான போட்டிகளும் நடத்தப்படவுள்ளது.

முன்பள்ளி மாணவர்களுக்கு வாசிப்பு மற்றும் சிறுவர் பாடல் போட்டிகளும் மாற்று வலுவுள்ளோருக்கு கவிதை மற்றும் வாசிப்புத் திறனை ஊக்குவிப்பதில் நூலகத்தின் பங்கு எனும் தலைப்பின் கீழ் கட்டுரைப் போட்டியும் நடத்தப்படவுள்ளது. (ஓ-6-36)

## அழகியல் பாட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் தரம் 10, 11க்கு அழகியற் பாடங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று காலை கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக தீவக வலய கல்விப் பணிப்பாளர் ஜீ.வி. இராதா கிருஷ்ணன் அறிவித்துள்ளார். (ஓ)


## நூல் கண்காட்சி

(கோண்டாவில்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கொக்குவில் பொது நூலகத்தில் நாளை மறுதினம் திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நூல் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

இதில் பாடசாலை மாணவர்கள் பங்கு பற்றிப் பயனடையுமாறு கொக்குவில் பொது நூலகர் கேட்டுக் கொள்கின்றார்.

(ஓ-36)



சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாலய பரிசில் தின விழாவில் உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ. குபேரநாதன், சுன்னாகம் லயன்ஸ் கழக தலைவர் என். சண்முகவேல் அதிபர் கு. ரவீந்திரன் மற்றும் ஆசிரியர்கூள், மாணவர்கள் அகவணக்கஞ் செய்வதைப் படத்தில் காணலாம்.

## இராசி பலன்

*10.10.2009*
*(புரட்டாதி 24 சனிக்கிழமை)*
*சப்தமி பின்னிரவு 3.25 மணிவரை*
*மிருகசீரிடம் முற்பகல் 9.26 மணிவரை*
*இராகுகாலம் 9.02-10.32 மணிவரை*
*சுபநேரம் 3.02-4.32 மணிவரை*
*நான்காம் புரட்டாதிச் சனி*

| | |
|---|---|
| மேடம் | எடுத்த காரியம் கைகூடும், அந்நியர் சந்திப்பு, வாக்கு மேன்மை, பொருள் சேர்க்கை. |
| இடபம் | காரிய தாமதம், தனவிரயம், போசன சுகக்குறைவு, மனச்சஞ்சலம். |
| மிதுனம் | உறவினர் சந்திப்பு,நல்ல முய ற்சி, புதிய தகவல், போசன சுகம். |
| கடகம் | பெரியோர் உதவி, காரிய அலைச்சல், சுபசெலவு, சயன சுகக் குறைவு. |
| சிங்கம் | காரிய அனுகூலம், பெருமையடைதல், பொருள் சேர்க்கை, போசன சுகம். |
| கன்னி | அதிக பிரயாசை, தூர தேசச் செய்தி, காரிய நன்மை, தனவருவாய். |
| துலாம் | புதிய திட்டமிடல், ஆன்றோர் சந்திப்பு, திடீர் பயணம், கட்டுப்பாடு. |
| விருச்சிகம் | ஆரோக்கியக்குறைவு, காரிய தாமதம், பிரயாண பயம், போசன சுகம். |
| தனுசு | பாராட்டு, அபூர்வ சந்திப்பு, போசன சுகம், எடுத்த கருமங்கள் கைகூடும். |
| மகரம் | செய்தொழில் முன்னேற்றம், போசன சுகம், பகைவர் நேசம், முயற்சி கைகூடும். |
| கும்பம் | கௌரவக்குறைவு, உடல்நலக் குறைவு, வேலைச்சுமை, தனவிரயம். |
| மீனம் | உறவினர் சந்திப்பு, ஆரோக்கியக்குறைவு, சுபசெலவு, பயந்த சுபாவம். |

வள்ளவன்

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 120 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 60 | 70 | 50 |
| தக்காளி | 50 | 60 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 80 |
| கரட் | 80 | 100 | 70 |
| பூசணி | 30 | 40 | 20 |
| புடோல் | 40 | 50 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 30 |
| சின்ன வெங்காயம் | 50 | 55 | 45 |
| பெரிய வெங்காயம் | 50 | 50 | 50 |
| பாகற்காய் | 120 | 130 | 50 |
| வெண்டிக்காய் | 50 | 60 | 50 |
| கரணைக் கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 60 | 70 | 60 |
| லீக்ஸ் | 120 | 140 | 120 |
| பீற்றூட் | 40 | 30 | 40 |
| கறிமிளகாய் | 70 | 80 | 80 |
| முருங்கைக்காய் | 200 | 240 | 140 |
| கீரை – 1 பிடி | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 260 | 280 | 240 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 |

# இடதுசாரி முன்னணியினால் அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது

## அமைப்பின் செயலாளர் சமல் ஜயநித்தி தெரிவிப்பு

(கொழும்பு)

அரசியல் கைதிகளாக சிறை வைக்கப்பட்டிருக்கும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோரை விடுவிப்பதற்கான அமைப்பொன்றை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கும் இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி, 1971 இல் கிளாச்சியில் ஈடுபட்டோரை விடுவிக்க முடியுமென்றால் ஏன் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய முடியாதென்றும் கேள்வி எழுப்பினார்.

இது தொடர்பாக மேலும் தெளிவுபடுத்திய இடதுசாரி முன்னணியின் அமைப்புச் செயலாளர் சமல் ஜயநித்தி தெரிவிக்கையில்,

நாட்டிலுள்ள சிறைச்சாலைகளில் தமிழர், சிங்களவர்கள் என 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் அரசியல் கைதிகளாக சிறை வைக்கப்பட்டுள்ளனர்.

அது மட்டுமல்லாது யுத்தம் முடிபுற்ற பின்னரான தற்போதைய கால கட்டத்தில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் விடுதலைப் புலி உறுப்பினர்கள் என்ற ரீதியில் மறைமுகமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஆனால், இவர்களை விடுதலை செய்வதற்கான எந்தவிதமான முன்னேற்பாடுகளையும் அரசாங்கம் எடுக்கவில்லை. 1971, 1988, 89 ஆம் ஆண்டுகளில் கிளர்ச்சியில் ஈடுபட்டோரும் அரசியல் கைதிகளாக சிறை வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

அவ்வாறானால் இன்று தடுத்து வைக்கப்பட்டுள்ளோரை விடுதலை செய்யாது அரசாங்கம் ஏன் தடுத்து வைத்துள்ளது. இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான அமைப்பொன்றை ஆரம்பித்துள்ளதோடு ஆர்ப்பாட்டங்களையும், ஊர்வலங்களையும் நடத்தவுள்ளோம். இதன் மூலம் அரசாங்கத்தை வலியுறுத்தி அரசியல் கைதிகளை விடுவிப்பதே எமது நோக்கமாகும் என்று தெரிவித்தார்.

அத்துடன் இன்று ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்திற்கு 20 ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றும் இவ்வாறான நிலைமைகள் தொடருமானால் எதிர்காலத்தில் பாரிய நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் எனவும் ஆதலால் அரசியல் கைதிகளாக சிறை வைக்கப்பட்டுள்ளோரின் பெற்றோர் உறவினர்கள் *143/3, கியூ வீதி, கொம்பனித்தெரு, கொழும்பு - 02* எனும் முகவரிக்கு விபரங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம் என்றார். (ஓ-6)

# அடுத்த பிரதமராகும் தகுதி எனக்கேயுண்டு

## அமைச்சர் டி.எம். ஜயரத்ன தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த பொதுத் தேர்தலின் பின்னர் நாட்டின் பிரதமராகும் தகுதி எனக்கு இருக்கின்றது. பிரதமராக என்னை நியமிப்பதற்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் டி.எம். ஜயரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறுகையில்,

அடுத்த பாராளுமன்ற தேர்தலின் பின்னர் நான் பிரதமராக நியமிக்கப்படுவேன் என்ற எதிர்பார்ப்பு எனக்கு இருக்கின்றது. பிரதமர் பதவிக்கு நான் தகுதியானவன். கடந்த முறையே நான் பிரதமராக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும். முன்னாள் ஜனாபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் தற்போதைய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் இந்த நிலைப்பாட்டிலேயே இருந்தனர்.

எனினும் அப்போது காணப்பட்ட நிலைமைகளின் காரணமாக அந்தப் பதவி எனக்கு கிடைக்கவில்லை. அன்று எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு நான் இணக்கம் தெரிவித்திருந்தேன்.

இந்நிலையில் அடுத்த பிரதமராக என்னை நியமிக்க வேண்டுமென பலர் கருதுகின்றனர்.

ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எனக்கு ஆதரவு வழங்க விருப்பத்துடன் உள்ளனர். அத்துடன் நாட்டின் பல்வேறு தரப்பினரும் எனக்கு ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது.

எது எவ்வாறாயினும் அடுத்த பிரதமர் தொடர்பில் தீர்மானிக்கப்பட வேண்டியது ஜனாதிபதியாகும். அவரின் முடிபு எவ்வாறு அமைந்தாலும் அதனை நான் ஏற்றுக் கொள்வேன் என்றார். (ஓ-6)

# சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றம்

## மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலரால் வெளியிடப்படும் அறிவித்தல்

வழ. இல: 05 /2009
தத்துவம்

காலஞ்சென்ற நாகமணி விசாகலிங்கத்தின் மரணச் சொத்து தொடர்பாக, குடியியல் நடை முறைச் சட்டக் கோவையின் 528 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம்.

நாகமணி விசாகலிங்கம் கைம்பெண்
– செல்வரஞ்சிதராணி,
மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி
– மனுதாரர்.

எதிராக

1. விசாகலிங்கம் செந்தூரன், இவரின் அற்றோனித்தத்துவகாரன் ஆறுமுகம் சீவரட்ணம் தாளயப்புலம், கரவெட்டி.
2. விசாகலிங்கம் மகள் கஜனி, மட்டுவில் கிழக்கு சாவகச்சேரி
3. விசாகலிங்கம் மகள் ஆர்த்தி, பாராயமற்ற 3 ஆம் எதிர்மனுதாரரின் வழக்குப் பாதுகாவலர் சின்னையா லோகநாதன், மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

– எதிர் மனுதாரர்கள்.

காலஞ்சென்ற நாகமணி விசாகலிங்கத்தின் மரணச் சொத்துத் தொடர்பாக மரணசாசன நிர்வாகத் தத்துவப் பத்திரம் பெறுவதற்காக இம்மன்றில் மனுதாரரால் விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளது என்பதனை இத்தால் அறிவிக்கப்படுகிறது.

மேற்படி மரணச் சொத்து தொடர்பாக மரண சாதன நிர்வாகத் தத்துவப் பத்திரமொன்றை மேலே குறிப்பிட்ட மனுதாரருக்கு வழங்குமாறு கட்டளையொன்றை வழங்கப்படுவதற்கு ஆட்சேபனையுடைய ஆளெவரும் 2009 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் அத்தகைய ஆட்சேபனையை (சத்தியக் கடதாசியின் ஆதாரத்துடன்) இம்மன்றில் கோப்பிடுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்கள்.

வரைபு,

செ. கணபதிப்பிள்ளை
மனுதாரரின் சட்டத்தரணி.

மரணசாசன அதிகாரப்பத்திர அலுவலர்,
மாவட்ட நீதிமன்றம்,
சாவகச்சேரி.

(3764)

# மத்தியஸ்தர் சபை அமர்வுகள் விரைவில் ஆரம்பம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி செயலர் பிரிவில் 20 பேர் கொண்ட மத்தியஸ்தர் குழாம் கடந்த மாதம் அமைக்கப்பட்டது.

இதன் தவிசாளராக ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற பதிவாளர் ப. நடராஜா நியமிக்கப்பட்டுள்ளதுடன் உதவித் தவிசாளராக யாழ். இந்துக் கல்லூரி முன்னாள் உப அதிபர் செ. சபாரத்தினம் நியமிக்கப்பட்டுள்ளார்.

மேலும் மத்தியஸ்தர் சபை அமர்வுகளை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஓ-4-29)

## பிரிட்டனில்

# காணாமல் போன இலங்கை பெண்ணை தேடும் முயற்சியில் பிரிட்டிஷ் பொலிஸார்

பிரிட்டனில் நாடு கடத்தல் உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் கடந்த எட்டு வாரங்களாக காணாமல் போயுள்ள இலங்கைப் பெண்ணை தேடும் முயற்சிகளை பிரிட்டிஷ் பொலிஸார் தொடர்ந்தும் மேற்கொண்டு வருகிறார்கள்.

39 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயாரான ஜெயந்தி ஜோசப் என்ற பிரஸ்தாப பெண் தம்மை நாடு கடத்தப் போகிறார்கள் என்ற அச்சத்தில் இருந்த போது கடந்த ஓகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி தொடக்கம் அவரை காணவில்லை.

ஜெயந்தியின் இளம் புதல்வியரான 16 வயது ஜீவிதாவும், 15 வயது நீரஜாவும் தற்பொழுது ஜயந்தி காணாமல் போன தினத்தில் இருந்து சமூக சேவைகள் திணைக்களத்தின் உதவியுடன் நண்பர்களின் பராமரிப்பில் இருந்து வருகிறார்கள்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தங்கள் சொந்த நாடான இலங்கையில் இருந்து புகலிடம் கோரி பிரிட்டனுக்கு வந்த இக்குடும்பத்தின் புகலிடக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் இப் பிள்ளைகளின் தகப்பனார் லீனஸ் ஜோசப், உணவு வாங்குவதற்காக வீட்டில் இருந்து வெளியே சென்ற போது இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டார்.

இந்தப் பிரச்சினைக்கு மத்தியிலும் ஜயந்தியின் பிள்ளைகளான இரு சகோதரிகளும் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்று வருகிறார்கள். (ஓ-6)

## இடம்பெயர் முகாமிலிருந்து

# தப்பித்து வந்த பெண்களிடம் கப்பம் பெற முயன்ற பொலிஸ் உத்தியோகத்தர் கைது

(கொழும்பு)

இடம்பெயர் முகாம்களிலிருந்து தப்பித்து வந்து வவுனியாவில் தங்கியிருந்த இரண்டு பெண்களிடம் கப்பம் பெற்றுக் கொள்ள முயற்சித்த பொலிஸ் உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இரண்டு பெண்களையும் அச்சுறுத்தி 5 இலட்சரூபா கப்பத்தை பெற்றுக்கொள்ள முயற்சித்த போது விசேட பொலிஸ் பிரிவினர் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கைது செய்துள்ளனர். இரகசிய பொலிஸார் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட குறித்த நபர் முகாம்களிலிருந்து தப்பித்து வந்த விடயத்தை அம்பலப்படுத்தாதிருக்க 5 இலட்ச ரூபா கப்பம் வழங்க வேண்டுமென கோரியுள்ளார்.

இந்த கோரிக்கைக்கு இணங்கிய குறித்த பெண்கள் வவுனியா பஸ் நிலையத்தில் வைத்து பணத்தை கொடுக்க முயற்சித்த போது வவுனியா விசேட பொலிஸ் பிரிவொன்று குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை கையும் களவுமாக கைது செய்துள்ளனர்.

இடம்பெயர் முகாம்களிலிருந்து தப்பித்து வரும் நபர்களிடம் தாம் இரகசிய பொலிஸார் என்ற போர்வையில் சிலர் பணம் பறித்து வருவதாக பொலிஸார் சுட்டிக் காட்டுகின்றனர். (ஓ-6)

## பாதுகாப்பு அமைச்சுக்கு

# மூவாயிரத்து 384 கோடி ரூபா குறை நிரப்பு சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சுக்கென 3 ஆயிரத்து 384 கோடி ரூபாவிற்கான குறைநிரப்பு பிரேரணையொன்று பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஆளுங்கட்சியின் பிரதம கொறடாவும் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவே இந்த பிரேரணையை சமர்ப்பித்தார்.

காகிதாதிகள் மற்றும் அலுவலக தேவைகள், உணவு சீருடை, மருத்துவ வழங்கல்கள், இயந்திர உபகரண பராமரிப்புச் செலவு ஆகியவற்றுக்கும் நட்ட ஈடு வழங்குவதற்கும் அனுமதி கோரியுமே இந்த குறைநிரப்பு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டது.

பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு சட்டமும் ஒழுங்கும் அமைச்சருமான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் கையொப்பமிட்டு பாராளுமன்ற அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த பிரேரணையில் இலங்கை இராணுவத்திற்கு 2025 கோடி ரூபாவும், கடற்படைக்கு 737 கோடி ரூபாவும், விமானப் படைக்கு 295 கோடி ரூபாவும், பொலிஸுக்கு 164 கோடி ரூபாவும், சிவில் பாதுகாப்பு படைக்கு 163 கோடி ரூபாவும் என மொத்தமாக 3384 கோடி ரூபா கோரப்பட்டுள்ளது. (ஓ-6)

# விஜய நகரப் பேரரசு

22

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

முதலாம் ஹரிஹறன் தொடங்கிய பணியை முதலாம் புக்கன் தொடர்ந்து செய்து வந்தான். தென்னிந்தியாவின் பல பகுதிகள் அவனுடைய ஆட்சியை ஏற்றுக் கொண்டன. பேரரசு பல ராஜ்யங்களாகப் பிரிக்கப்பட்டது. "ராஜ்யங்களை" அரச குடும்பத்தைச் சேர்ந்த அரசகுமாரர்களோ பேரரசரின் நம்பிக்கைக்கும் தனிப் பற்றுக்கும் பாத்திரமான தளபதிகளோ ஆட்சிசெய் தார்கள். உதயகிரி ராஜ்யம் (நெல்லூர் , கடப்பை), பெனுகொண்ட ராஜ்யம் (பெல்லாரி,அனந்தப்பூர், வடமைசூரின் சில பகுதிகள்) முல்வாயி ராஜ்யம் (மைசூரின் சில பகுதிகள் ; சேலம் ,தென்னார்க்காடு,அரசு ராஜ்யம் அல்லது மலகராஜ்யம் (பனவாசி, சந்திகுத்தி, கோவா), துளு ராஜ்யம் அல்லது பரகூர் மங்களூர் ராஜ்யம் ஆகியவைகளும் மேலே கூறியவாறு விஜயநகரப் பேரரசின் எல்லைக்குள்ளிருந்த சிறிய ராஜ்யங்கள்.

முதலாம் புக்கனுக்குப் பின் அவனுடைய மகன் இரண்டாம் ஹரிஹறன் பட்டத்துக்கு வந்தான். அவன் 1377 முதல் 1404 வரையில் இருபத்தேழாண்டு ஆட்சி புரிந்தான். அவன் விஜயநகரப் பேரரசின் ஆதிக்கத்தைத் தென்னிந்தியா முழுவதிலும் நிலை நாட்டினான். மாதவரின் உடன் பிறந்தவரும் மிகவும் புகழ் பெற்றவருமாகிய சாயனாச்சாரியர் ஹரிஹறனுடைய முதலமைச்சராயிருந்தார்.

ஹரிஹரன் தன்னுடைய் சிற்றப்பன் பெரியப்பனுடைய மக்களுக்குப் பதிலாகத் தன்னுடைய மக்களையே மாகாண ஆளுநர்களாக நியமித்தான்.

அவ்வாறு தான் தேவரா யன் உதயகிரி ஆளுநன் ஆனான். சற்றுத் தள்ளிய உறவினர்கள் மாகாண ஆளநர் களாயிருந்தால் அவர்களுக்கு அரச பதவியின் மேல் ஆசை தோன்றக்கூடும். அது பேரரசின் சிதைவுக்குக் காரணமாகலாம். அத்தகையதொரு நிலைமை ஏற்படாமல் தடுப்பது ஹரிஹரனுடைய நோக்கம். ராஜகொண்டாவில் ஆட்சிசெய்து வந்த வெமல அரசன் அனுப்பொட்டன் சுமார் 1369 இல் தெலிங்கனா மீது படையெடுத்து காப்பைய நாயக்கனை வென்று கொன்றுவிட்டான். அதனால் தெலிங்கானாவின் அரசியல் நிலைமையில் ஒரு முக்கிய மாறுதல் ஏற்பட்டது. அனுப்பொட்டன் பாமினியரசர்களோடு நட்புறவு கொண்டிருந்தான்.

எனவே, அனுப்பொட்டனுடைய வலிமையின் பெருக்கத்தால் கொண்ட வீட்டுக்கு விஜயநகருக்கும் அபாயம் நேரக்கூடும். இரண்டாம் ஹரிஹரனுடைய மகன் இளவரசன் இரண்டாம் புக்கன் 1390 ஆம் ஆண்டின் இறுதிக்குள் வாரங்கல் மீது இருமுறை படையெடுத்தான்.ஆனால் அப்படையெடுப்புகளால் முடிவான விளைவுகள் ஏற்படவில்லை. ஏழாண்டுகளுக்குப் பின் அவன் பங்கலைக் கைப்பற்றினான். தலைநகரத்திலிருந்து எட்டியிருந்த அந்த ஊரில் இராணுவத் தளத்தை அமைத்துக்கொண்டு தெலிங்கானா மீது படையெடுப்பது எளிதாயிருந்திருக்கும்.ஆனால்,விரைவிலேயே அவன் பங்கலை இழந்துவிட்டான்.

விஜயநகரப் பேரரசின் எல்லைவேறு திசைகளிலும் விரிவடைந்தது. வடமேற்கில் முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்த கோவா, சால், தபோல் ஆகிய துறைமுகங்களும் கரப்பட்டினமும் விஜயநகர ஆட்சிக்குள் வந்தன. சிறிது காலம் கிருஷ்ணா நதி விஜயநகரகப் பேரரசின் வட எல்லையாக இருந்தது. கொண்ட வீட்டு ரெட்டிகளின் ஆட்சியிலிருந்து கர்நூலும் நெல்லூரும் - குண்டூரின் சில பகுதிகளுங் கூட-விஜயநகர ஆட்சிக்குள் வந்தன. (1382-1385). தென்னகத்திலும் விஜய நகரப் பேரரசின் ஆட்சி வலிமையடைந்தது. இளவரசன் விரூபாட்சன் தென்னகத்தின் மீது படையெடுத்து அங்கு விஜயநகர ஆதிக்கத்தை வலுப்படுத்தியதோடு இலங்கைக்கும் சென்று அதனையும் விஜயநகருக்குத் திறைசெலுத்துமாறு செய்தான். இவ்வாறு விஜயநகரப் பேரரசின் வலிமை பெருகுவதற்குப் பாமினியரசன் இரண்டாம் முகமதுவினுடைய இயல்புகளும் அவன் இறந்தபின் அதிகார ஆவல்மிக்க துருக்கிய அடிமை துகல்சிங் செய்த சூழ்ச்சிகளின் பயனாக பாமினிய ராஜ்யத்தில் தோன்றிய குழப்ப நிலையும் ஓரளவேனும் காரணமாயிருந்தன என்று நாம் உறுதியாகக் கூறலாம்.

1398-99 இல் விஜயநகருக்கும் பாமினி ராஜ்யத்திற்கும் மீண்டுமொரு கடுமையான போர் தொடங்கியது. அதில் வெற்றிபெற்ற பிரோஸ் இரண்டாம் ஹரிஹறனுடைய படைகளை கிருஷ்ண நதிக் கரையிலிருந்து ஏராளமான போர்க் கைதிகளுக்கு ஈடாக ஒரு மிகப் பெருந் தொகையை மீட்புப் பணமாகப் பெற்ற பின்னரே அவன் போரை நிறுத்து வ தற்கு ஒப்புக் கொண்டான். அதற்குப் பின் இரு திறத்தாரும் கையெழுத்திட்டு ஏற்றுக் கொண்ட உடன்படிக்கைக்கு இரண்டு ராஜ்யங்களின் எல்லைகளும்போருக்கு முன் பிருந்தது போலவே இருக்கவேண்டும் என்றும் ஒருவர் மற்றவருடைய குடிமக்களைத் துன்புறுத்தாமலிருக்க வேண்டுமென்றும் தெளிவற்ற கூறுகளைக் கொண்டதாயிருந்தது.

அந்தச் சமயத்தில் தட்சிணத்தின் பல பகுதிகளிலும் தோன்றிய பஞ்சம் மக்களுடைய துன்பத்தை மேலும் பெருக்கியது. இரண்டாண்டுக்குப் பின் மாளவ சுல்தானும் குஜராத் சுல்தானும் ஹரிஹறனோடுசேர்ந்து கொண்டால் அவன் பாமினி சுல்தானுக்குச் செலுத்துவதாக ஒப்புக்கொண்டிருந்த திறையைச் செலுத்தாமல் நிறுத்திவிட்டான்.

1404 ஆம்ஆண்டு ஆகஸ்ட் மாதம் இரண்டாம் ஹரிஹறன் இறந்தபோது அவனுடைய மக்களுள் கடுமையான அரசுரிமைப் போட்டி ஏற்பட்டது.அரியணையைக் கைப்பற்றுவதில் முதலில் விரூபாட்சன் வெற்றி பெற்றான். ஆனால், விரைவில் இரண்டாம் புக்கன் அவனைத் தள்ளிவிட்டுத் தானே அரியணையேறி இரண்டாண்டு ஆட்சி செய்தான்.

(1405-06). இறுதியில் முதலாம் தேவராயன் புக்கனை தோல்வியடையச் செய்து தானே அரிணையேறி 1406 நவம்பர் 5 ஆம் திகதியன்று தன் முடிசூட்டு விழாவை நடத்தினான்.

இரண்டாம் - புக்கனும் தேவராயனும் விஜயநகருக்கு புதிய் சுவர்களையும் கோபுரங்களையும் கட்டியதோடு வெளியரண்கள் பலவற்றையும் கட்டி விஜயநகரத்தை மிகவும் விரிவுபடுத்தினார் என்று போர்த்துக்கீசிய வரலாற்றுப் பதிவாளர் நூனிஸ் எழுதி வைத்திருக்கின்றார்.

ஆனால் அவர்கள் செய்த மிகப் பெரிய செயல் புங்கபத்திரை நதியில் ஓர் அணை கட்டி அதிலிருந்து 15 கல் தொலைவில் இருந்த விஜயநகரத்தை இணைப்பதற்கு ஓர் உயர் மட்டக் கால்வாயை வெட்டியது தான் என்று சூவல் கூறுகிறார்.

பழைய நகரத்தின் பல பகுதிகளில் இப்போதிருக்கின்ற விளைநிலங்களுக்கு பாசன வசதி தருகிற கால்வாய்தான் புக்கனும் தேவராயனும் வெட்டிய கால்வாய் என்பது உண்மையாயிருந்தால் அவர்களுடைய செயல் மிகவும் வியக்கத்தக்க அருஞ்செயல் என்று சூவல் மேலும் கூறுகிறார்.

மலையடிவாரத்தில் உள்ள கெட்டியான பாறையை பல கல்நீளம் பிளந்து அந்தக் கால்வாயின் ஒரு பகுதி வெட்டப்பட்டிருக்கிறது. இந்தியாவிற் காணக் கிடைக்கின்ற மிகவும் குறிப்பிடத்தக்க நீர்ப்பாசனத் திட்டங்களுள் இந்த அணையையும் சேர்த்துக்கொள்ளலாம் என்று சூவல் கூறி வியப்படைகிறார்.

பேராசிரியர்
க.அ.நீலகண்டசாஸ்திரிகள்

தேவராயனுடைய ஆட்சியின் தொடக்கத்திலேயே விஜயநகருக்கு பாமினி ராஜ்யத்திற்கும் போர் மூண்டது. முடுகலில் இருந்த ஓர் அழகிய பெண்ணின் மீது தேவராயன் கொண்ட ஆசை தான் அந்தப் போருக்குக் காரணம் என்று பேரிஷ்மா கூறுகிறார். ஆனால் இந்த ராஜ்யமாகிய விஜயநகரத்தோடு ஒரு ஜிஹாதைத் (புனிதப் போரை) தொடங்கவேண்டும் என்று பிரோஸ் விரும்பியதுதான் அந்தப் போருக்குக் காரணமாயிற்று என்று வேறு சிலர் எழுதிவைத்திருக்கின்றனர். (தொடரும்)

# உலக மக்களைக் கவர்ந்த ஒபாமா

## அடிமைச்சந்தையிலிருந்து வெள்ளை மாளிகை வரை

145



"வலியார்முன் தன்னை நினைக்க
தான்தன்னின்
மெலியார் மேல் செல்லும் இடத்து"
(குறள் 250/ அதிகாரம் 25)

என்கிறார் வள்ளுவர்.

"மெலியார்முன் தன்னை" நினைக்கும் இந்த அருளுடைமை என்ற "empathy" இருக்குமானால் சமுதாயத்தில் வாழ்க்கைப் போராட்டம் நடத்தும் கீழ்மட்ட மக்கள் பால் அரசியல் அதிகாரம் சென்றடையும்.

"அவர்களும் எங்களைப் போன்றவர்கள் தான் என்ற எண்ணம் இருக்குமானால், அவர்களின் போராட்டங்களும் நம்முடையதே என்று எடுத்துக்கொள்வோம். நாம் உதவத் தவறின் நாமே இழிந்தவர்களாவோம்" என்பது ஒபாமாவின் கருத்து. இவ்வாறு கூறுவதால் வாழ்க்கைப் போராட்டம் நடத்துபவர்கள் தங்களிலும் பார்க்க வசதியாக வாழ்பவர்கள் பால் காட்ட வேண்டிய பரிவிலுமிருந்தும், அவர்களை நன்கு புரிந்து கொள்ளவேண்டிய கடப்பாட்டிலிருந்தும் விடுபட்டவர்கள் என்பது கருத்தல்ல.

கறுப்பர்களின் தலைவர்கள் வெள்ளையர்கள் கொண்டுள்ள நியாயபூர்வமான பீதிகளைப் புரிந்துகொள்ள வேண்டும். கறுப்பர்களுக்குச் சாதகமான ஏற்புடைய எந்தச் செயலுக்கும் எதிராக போர்க் கொடி தூக்கும் வெள்ளையர்கள் பற்றிய பயம் அவர்களில் பலருக்குண்டு.

அதைப் புரிய வேண்டுவது அவசியம். தொழிற்சங்கப் பிரதிநிதிகள், தொழில் வழங்குநர்கள் எதிர்நோக்கும் சந்தைப் போட்டியின் அழுத்தங்களை விளங்கிக் கொள்ள மறுக்கமுடியாது.

ஒபாமா எவ்வளவு தூரம் ஜோர்ஜ் புஷ் அவர்களுடன் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் புஷ்ஷின் கண்களூடாக உலகைப் பார்க்கவேண்டிய கடப்பாட்டை அவர் தட்டிக் கழிக்கவில்லை. அதுதான் மற்றவர்களைப் புரிந்து empathy கொள்ளல்.

இந்தப் புரிந்துணர்வு மற்றவர்களை நன்கு விமர்சனம் செய்வதன் மூலம் தான் வரும். தாராளக் கொள்கை எதிர் பழமைவாதம் ; அடக்கப்பட்டவர்கள் எதிர் அடக்குபவர்கள், அதிகாரிகள் எதிர் அதிகார மற்றவர்கள் என்று ஒருவரையொருவர் விமர்சிக்கும் போது முடிவில் ஏற்படுவதுதான் இந்த (empathy) புரிந்துணர்வு.

அது எங்களை துயிலிலிருந்து தட்டியெழுப்பிவிடும்.எங்கள் குறுகிய பார்வைக்கப் பால் கூர்ந்து பார்க்க வைக்கிறது.ஆகவே யாரும் பொதுமையைக் கண்டுகொள்ள உதவும்.

### ஐம்பொன்

பரஸ்பரப் புரிந்துணர்வு மாத்திரம் போதாது. புரிந்ததை செயல்படுத்தவேண்டும். அது தான் மக்கள் கொண்டுள்ள விழுமியங்களின் பரிசோதனைக்கூடம்.

அவைகள்தான் அமெரிக்கர்களின் வழித்துணை. நம் முன்னோரளித்த அருஞ் செல்வம். அதை எம் பின்னோருக்கு நாம் விட்டுச் செல்ல வேண்டும்.அவை எம்மிடமிருந்து எதிர்பார்ப்பது வாய்ச்சொல் வீரமல்ல செயல் திறன் வீரமே. (தொடரும்)

# உலகுக்கு உணவளித்த உத்தமர்

## நோர்மன் போர்லாக்

### இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 9-XVI

கலாநிதி போர்லாக் பற்றி பேராசிரியர் சுவாமிநாதன் அவர்கள் மேலும் குறிப்பிடும் போது வேளாண்மையின் அபிவிருத்திக் கென் விளைநிலத்திலே அல்லும் பகலுமாக உழைத்த மாமனிதன் இவரென வர்ணித்துள் ளார்.

மேலும் இந்தியாவிலுள்ள வேளாண் கல்லூரிகளில் உரையாற்றிய போது விவசா யங் கற்கும் மாணவர்களனைவரையும் ஆய்வு கூடத்திலிருந்து நேரத்தைக் கழிக் காது விளை நிலத்திற்கு சென்று கற்க வேண் டிய பலவற்றை கற்றுக் கொள்ளுங்கள் என விளித்துக் கூறினார். அவரது கூற்று எம்மவர் களுக்கும் எத்துணை பொருத்தம்.

உணவுக்காக அதன் உற்பத்திக்காக அய ராது அர்ப்பணிப்புடன் ஈடுபடுபவருக்கு அவரை ஊக்குவிப்பதற்காக நோபல் பரிசு வழங்கப் பட்ட வேண்டுமென போர்லாக் எண் ணியி ருந்தார். அவரது இந்த நல்எண்ணத்தினை நோபல் பரிசு வழங்கும் நிறுவனம் கவனத்தி லேனும் எடுக்கவில்லை. இதனால் வருடாந்த உலக உணவு பரிசினை ஆரம்பித்து அறி வித்து அதன் முதல் பரிசினை கலாநிதி சுவாமிநாதனுக்கே வழங்கப்பட் டது.

போர்லாக் அவர் கள் தாவர பிறப்புரிமையியலில் அடிப்படைக் கல்வியைப் பெற்று கோதுமையில் புதிய பல பயிர் இனங்களை உருவாக்கி உலகெங் குமுள்ள நாடுகள் அதனால் பயன்பெற வைத்தார். விஞ்ஞானத்தையும், மனித நேயத்தையும் அதனுடன் சேர்த்து கடின உழைப்பையும் ஒன்றிணைத்து வெற்றியும் கண்டார். முதலாவதாக கோதுமையில் அந்த நாட்களில் ஏற்பட்ட துரு நோய்க்கு எதிர்ப்பு தன்மையுள்ள இனங்களை உருவாக்கி பயிரிட்டு 20% இலிருந்து 40% வரை விளைச் சலை உயர்த்தியும் காட்டிய பெருமை போர் லாக் அவர்களுக்குண்டு.

இரண்டாவதாக அவருடைய கண்டு பிடிப்புக்களில் உருவாக்கப்பட்ட கோதுமை யில் சாதாரணமாக பயன்படுத்திய இனத்தின் விளைச்சல் கூடும்போது கதிரினுடைய நிறை கூடுமல்லவா. இவ்வாறு கதிரினது நிறை அதிகரித்து சரிந்து கோதுமை விதைகள் உதிர்ந்து சேதமுறாது இருக்கும் வண்ணமே குட்டையினங்கள் பெரிதும் உதவின. இது போன்று பல்வேறு வழிகளில் விளை நிலத் தில் ஏற்படக்கூடிய சேதத்தை தவிர்க்கக் கூடிய தாயிருந்தது. அவரது கண்டு பிடிப்புக் களின் வரப்பிரசாதம் எனலாம்.

மூன்றாவதாக அவரினால் முன்வைக்கப் பட்ட உள்ளூர் தொழில்நுட்பமாக தொடர் பயிருருவாக்கம் (Shuttle breeding) என் பதற்கிணைவாக ஒரே வருடத்தில் தொடராக இரு பயிர்களை உற்பத்தி செய்து காட்டினார். அதுவரைக்கும் ஒரு வருடத்தில் ஒரு பயிர்ச் செய்கை என இருந்ததை இரு தரம் பயிர் செய்து ஒட்டுமொத்த விளைச்சலை இரு மடங்காக உயர்த்திக் காட்டினார்.

இரு வேறு சூழல் காரணிகள் இருந்தா லும் விரைந்து கதிர் முற்றும் தன்மை, துரு நோய்க்கான எதிர்ப்பு தன்மை என இவற் றையுள்ளடக்கிய போர்லாக் அவர்களின் புதிய திருந்திய கோதுமை இனங்கள் எந்த மண் ணிலும், எந்த உயரத்திலும் வளரக் கூடி யன என்பவற்றை வளர்த்து காட்டிய போது முழு உலகமுமே போர்லாக் அவர்களீன் பரந்து பட்ட அறிவை எண்ணி வியந்து நின்றது.

இது இவரது இமாலய சாதனை என்று கூறினாலும் மிகையாகாது. மெக்சிக்கோ விற்கென உருவாக்கப்பட்ட குட்டை இன புதிய திருந்திய கோதுமை இனங்கள், இந்தி யாவிலும் பாகிஸ்தானிலும் பயிரிடப்பட்போது அதேயளவு விளைச்சலைத் தந்தமை அனை வரையும் வியப்புக்குள்ளாக்கியதில் ஆச்சரிய மொன்றில்லையே. ஆனாலும் அந்தந்த நாடுகளின் சட்ட திட்டங்களில் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளீடுகளில் முக்கியமானதான அசேதன பசளைகளை (யூரியா, சுப்பர் பொசுபேற்று) அதிகளவில் விளை நிலத்திற்கு இட வைத்தார்.

எமது சமூகத்திற்கு எவ்வளவு தான் செய் தாலும் அனைத்து பயனையும் அவதானித் துக் கொண்டு பெற்றும் கொண்டு பின் வசை பாடிய கதை எக்கால கட்டத்திற்கும் பொருந் தும்.

இவ்வாறான சீர்மிகு அணுகுமுறையி னால் புதிய திருந்திய அதிக விளைச்சலைத் தரக்கூடிய கோதுமை இனங்களை மெக் சிக்கோ என்ற வரம்பையுந் தாண்டி கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து இந்தியா, பாகிஸ் தான், சீனா மற்றும் தென்னமரிக்காவின் ஏனைய பாகங்களிலும் பயிர் விளைவித்து காட்டினார். இதன்மூலம் அரைவயிறு கால் வயிறு என உணவின்றி தவித்த பல உள் ளங்களை மனித உயிர்களை உணவு கொடுத்து உயிர் கொடுத்த பெருமைக்குரி யவரானார். அதிகம் அலட்டிக் கொள்ளாத தன்மை அவரை உயர்த்திக் காட்டியது.

இமாலய சாதனை இதுவன்றோ நன் மக் களர் 1950களில் 1.70 பில்லியன் ஏக்கரில் பயிரிட்ட கோதுமையில் பெறப்பட்ட விளைச் சலான 692 மில்லியன் தொன்னை 1992 களில் ஏறத்தாள அதே நிலப்பரப்பில் 1.9 பில்லியன் தொன்களாக உயர்த்திக் காட்டி னார். இதுகாலும் இருந்த அதியுச்ச விளைச் சலை விட 150 சதவீதம் உயர்த்திக் காட்டிய பெருமை போர்லாக்கினதும் அவரது ஆய் வுக் கொள்கைக்கு மேலும் சிறப்பைத் தந்தன.

விளைச்சல் உயர்ந்ததால் பட்டினிச் சாவின் விளம்பில் அல்லலுற்ற மக்களை விரைந்து காப்பாற்ற முடிந்தது. இதுவன்றோ உணவுப் புரட்சி. இதனால் இதற்கு பசுமைப் புரட்சியென்றார். அதன்மூலம் பசுமைப்



**கலாநிதி கு.மிகுந்தன்**
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

புரட்சிக்கே தந்தையானார்.

இருபதாம் நூற்றாண்டு பெருமைப்பட்டுக் கொள்ளும் ஆற்றலுள்ளவராக போர்லாக் காணப்பட்டமை அனைத்து உள்ளங்க ளுக்கும் பசி பட்டினியால் வதைபட்டு துடித்த மானிட உயர்களுக்கோர் வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது.

பாகிஸ்தான் 6 வருடங்களுக்குள் கோதுமை உற்பத்தியினால் தன்னிறைவு கண்டது. இத னுடன் இந்தியாவும் இணைந்து கொண்டது.

(தொடரும்)

# யாழ். மாவட்ட மேட்டு நிலங்களில் மானாவாரியாக மறுவயற் பயிர்ச்செய்கை

யாழ் மாவட்டத்தில் அண்ணளவாக 5000 ஹெக்ரேயர் மேட்டு நிலம் கால போகத்தில் எந்த ஒரு பயிரும் செய்கை பண் ணப்படாமல் தரிசாக விடப்பட்டுள்ளது. இவ் வாறான மேட்டு நிலங்களில் அவரையினப் பயிர்களான **உழுந்து, நிலக்கடலை** போன் றவற்றையும் தானியப்பயிரான **சோளத்தி னையும்** மிகவும் இலாபகரமாக பயிரிடமுடி யும் என்பதனை தொடர்ச்சியான ஆராய்ச்சி கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**பயிர்ச்செய்கை நடைமுறைகள்**

**உழுந்து**

**விதைக்கும் காலம்:**-ஜப்பசி மாத நடுப் பகுதியிலிருந்து கார்த்திகை மாதம் ஆரம்பம் வரை விதைப்பை மேற்கொள்ளலாம்.

**நிலப்பண்படுத்தல்**

ஜப்பசி முதல் மழையுடன் நிலத்தை நன்கு உழுது பின் பரம்படிக்கப்படும். இத னால் நன்கு களைகள் கட்டுப்படுத்தப்படுவ துடன் சிறந்த மேடையும் அமைக்க இயலும்.

**நடுகையும் நடுகை இடைவெளியும்**

வரிசைகளில் விதைப்பு சிறந்தது. வரி சைகளுக்கிடையில் 30 செ.மீஉம் பயிர்களுக் கிடையிலும் 15 ச.மீ அவசியம்.

**விதை தேவை**-ஹெக்ரயருக்கு 20 கி.கி.

**வளமாக்கியிடல்**

**அடியுரம்** -யூரியா -35 கி.கி / ஹெக்ரேயர்,மியுரேற்றுப் பொற்றாசு -75 கி.கி / ஹெக்ரேயர்.

மேற்கட்டுப் பசளை

யூரியா - 30 கி.கி / ஹெக்ரேயர்

**களைக்கட்டுப்பாடு**

பயிரின் ஆரம்ப வளர்ச்சியின் போது களைகட்டல் முக்கியமானதாகும். பயிர் விதை த்து மூன்றாவது, ஆறாவது கிழமைகளில் மண்வெட்டி கொண்டு களை கட்டல் சிறந்தது.

**பூச்சி பீடை தாக்கம்**

உழுந்தில் பூச்சி பீடைத்தாக்கம் பெரும் போகத்தில் அதிகம் அவதானிக்கப்பட வில்லை. எனவே பூச்சி நாசினிகள் விசிறு வதை தவிர்த்துக் கொள்ளவும்.

**நோய்த்தாக்கம்**

இலைப்புள்ளி, தூள் பூஞ்சணம், துரு நோய் என்பன சில நேரங்களில் அவதானிக் கப்படலாம். சிபார்சு செய்யப்பட்ட பங்கசு நாசி னிகள் மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளலாம்.

**அறுவடை**

காய்கள் அனைத்தும் கருமை நிறமான வுடன் (85-90) நாட்களில் ஒரே நேரத்தில் மரத்துடன் அறுவடை செய்யலாம்.

**விளைவு**

1000-1300 கி.கி /ஹெக்ரேயர்

**நிலக்கடலை**

**மண்** -பொதுவாக நீர் வடிப்புள்ள பாரம் குறைந்த மணல் இருவாட்டி மண் உள்ள இடங்களில் அறுவடை செய்தல் மிக இலகு வாக இருக்கும். கடினமான மண்ணாக இருப்பின் அறுவடைக்கான செலவு அதிக மாக இருக்கும்.

**விதைக்கும் காலம்:**- ஐப்பசி மாத நடுப் பகுதியிலிருந்து அம்மாத இறுதி வரை விதைப்பை மேற்கொள்ளலாம்.

**நிலப்பண்படுத்தல்**

ஐப்பசி முதல் மழையுடன் நிலத்தை நன்கு உழுது பின் பரம்படிக்கப்பட்டு வரம்பு சால் அமைக்கப்படும் இத்தோடு களைகளும் கட்டுப்படுத்தப்படும்.

**வர்க்கம்**- திஸ்ஸ இனம் மிகவும் சிறந் தது. 90-100 நாட்களில் அறுவடை செய்யலாம்.

**நடுகையும் நடுகை இடைவெளியும்**

வரிசைகளில் விதைப்பு சிறந்தது. வரிசை களுக்கிடையில் 45 ச.மீ உம் பயிர்களுக்கி டையிலும்15 ச.மீ அவசியம்.

மண்ணின் ஈரலிப்பு உள்ள போதே விதைகள் நடப்பட வேண்டும்.ஒரு குழியில் ஒரு தாவரம் என்ற வகையில் நடுகையை மேற்கொள்ளவும்.

**விதை தேவை**- ஹெக்ரயருக்கு 70 கி.கி (கோது அகற்றியது).

**வளமாக்கியிடல்**

அடியுரம் - யூரியா -35 கி.கி /ஹெக்ரேயர், சுப்பர் பொசுபேற்று -140 கி.கி / ஹெக்ரேயர், மியுரேற்றுப் பொற்றாசு -75 கி.கி / ஹெக் ரேயர்.

மேற்கட்டுப்பசளை -யூரியா -30 கி.கி./ ஹெக்ரெயர் பூக்கும் போது

**மண் அணைத்தல்**

பயிர் பூக்கும் காலத்தில் பயிருக்கு மண் அணைத்தல் அவசியம். இது மண் கடினத் தன்மையை நீக்கி பூக்காம்பு மண்ணுள் இல குவில் உட்செல்ல உதவும். இங்கு பூக்காம்பில் சேதம் ஏற்படாதவாறுகவனித்தல் அவசியம்.

**களைக்கட்டுப்பாடு**

பயிரின் ஆரம்ப வளர்ச்சியின் போது களை கட்டல் முக்கியமானதாகும். பயிர் விதைத்து மூன்றாவது ஆறாவது கிழமைகளில் மண் வெட்டி கொண்டு களை கட்டல் சிறந்தது.

**பூச்சி பீடை தாக்கம்**

நிலக்கடலையில் காய் துளைப்பான், கறையான், அகிளான் போன்றவை சில இடங்களில் பிரச்சினையாக இருக்கலாம். அப்படி இருப்பின் சிபார்சு செய்யப்பட்ட கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றவும்.

**நோய்த்தாக்கம்**

காறை அழுகல், துருநோய் போன்ற பங்கசு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு. நோய்கள் அவதானிக்கப்படின் சிபார்சு செய் யப்பட்ட பங்கசு நாசினிகளை தேவையான நேரத்தில் தேவையான அளவில் பாவித்தல் வேண்டும்.

**ந. செல்வநாதன்**
ஆராய்ச்சி உத்தியோகத்தர்
**சோ. விஜயதாசன்**
விவசாயப் போதனாசிரியர்
விவசாய ஆராய்ச்சி நிலையம், திருநெல்வேலி

**அறுவடை**

காய் முதிர்ச்சியடைய 2 மாதம் எடுக்கும் பயிர் முதிர்ச்சியின் போது தாவரம் மஞ்சளாகி இலைகள் உதிரத் தொடங்கும். 90 நாட்களின் பின்பு அறுவடையை ஆரம்பிக்கலாம்.மண் ஈரமாக இருக்கும் போது கையால் அல்லது முள் மண்வெட்டியின் உதவியால் அறு வடையை மேற்கொள்ளலாம்.

அறுவடை செய்த பயிர் 2-3 நாட்கள் வெய்யிலில் உலரவிடப்படும். இதன் பின் இவற்றைச் சேகரித்து தாவரத்திலிருந்து விதைகளை வேறாக்கி நன்கு துப்பரவாக்கி 10% ஈரலிப்பு வரும் வரை உலரவிட்டு சேமித்து வைக்கலாம்.


**விளைவு**

2000 கி.கி / ஹெக்ரேயர்

(தொடரும்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
12
02
1956



மறைவு
10
09
2009

## அமரர் பாலசுப்பிரமணியம் குகநேசன்

(கோணேஸ் / துரை)

ஆறவில்லை பெரிய தந்தையே எங்கள் இதயம்
ஆவி பிரிந்து நீங்கள் சென்ற துயரம்
மறப்போமா உங்கள் அன்பு முகத்தினையே
மாறுமோ எங்கள் மனத்தின் துன்பம்
வையத்தில் நாங்கள் வாழும் காலமெல்லாம்
நித்தமும் உங்களை நினைத்தே வாழ்வோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

என்றும் உங்கள் நினைவுடன்
பெறாமகன் ஜனா (பிரான்ஸ்)

## முதியோர் தினவிழா

(அல்வாய்)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலக பிரி வின் சர்வதேச முதியோர் தின விழா நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பருத்தித்துறை சிவன்கோயில் மண்டபத்தில் பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி முன்னாள் உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரப்பிள்ளை கலந்துசிறப் பிப்பதுடன், சிறப்பு விருந்தினர்களாக சமூக நலத்துறைத் திணைக்கள திட்ட இணைப் பாளர் ரி.கிருபாகரன், யாழ். சாந்திகம் நிறை வேற்றுப் பணிப்பாளர் எஸ்.பி.சங்கரப்பிள்ளை, பருத்தித்துறை முதியோர் பேரவை தலைவர் எஸ்.தேவதாஸன் ஆகியோர் கலந்துகொள் ளவுள்ளனர்.

அத்துடன் முதியோர்களை கௌரவித்தல் மற்றும் வெற்றிபெற்ற மாண வர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற வுள்ளது. (ஓ-4-19)

## யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட புதிய மாணவர் அனுமதி

(யாழ்ப்பாணம்)

2008 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் அடிப்படையில் யாழ். பல் கலைக்கழக விஞ்ஞான பீடத்திற்கு அனுமதி பெற்ற மாணவர்களுக்கான வரவேற்பும் வழிகாட்டலும் எதிர்வரும் இருபத்தோராம் திகதி புதன்கிழமை காலை ஒன்பது மணிக்கு விஞ்ஞான பீட பௌதிகவியல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. உபவேந்தர், பேராசிரி யர்கள், விரிவுரையாளர்கள், சிரேஷ்ட மாணவ ஆலோசகர், மாணவர் நலன் சேவைகள் உதவிப் பதிவாளர், மருத்துவ அலுவலர், விஞ்ஞான பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஆகியோர் புதிய மாணவர்களை வரவேற்று பல்கலைக்கழகச் செயற்பாடுகள் பற்றி விளக்கமளிக்கவுள்ளனர்.

முதலாம் நாள் நிகழ்வுகளைத் தொடர்ந்து ஒரு சில நாட்களுக்கு இம்மாணவர்களுக்கு கற்கை நெறிகளுக்கான அறிமுகம், ஆங் கிலம் கற்பித்தலுக்காகத் தரம் பிரிக்கும் தேர்வு, கணனி ஆங்கிலம் கற்றலுக்கான வசதிகள் பற்றிய அறிமுகம், விளையாட்டுத்துறை வசதிகள், நூலக பாவனை பற்றிய கருத்தரங் குகள் ஆகியன நடைபெறவுள்ளதாகவும் கற்கை நெறிகள் நவம்பர் நான்காம் திகதி ஆரம்பமாகவுள்ளதாகவும் யாழ். பல்கலைக் கழக விஞ்ஞான பீடாதிபதி இ.குமாரவடிவேல் அறிவித்துள்ளார். (ஓ)

## சிங்கள மொழிப்பயிற்சி பாடநூல்

(யாழ்ப்பாணம்)

அரச கரும மொழிகள் திணைக்களத் தினால் சிங்கள மொழிப் பயிற்சி, பேச்சு சிங்கள பாடநெறி (மட்டம் III) க்கான நூல் வெளியிடப் பட்டுள்ளது.

இந் நூலைப் பெற்றுக்கொள்ள விரும்பும் அரசாங்க உத்தியோகத்தர்கள் மாவட்டச் செயலக நிர்வாக கிளையுடன் தொடர்பு கொள் ளுமாறு, சகல பிரதேச செயலகங்களுக்கும் மாவட்டச் செயலரால் அறிவிக்கப்பட்டுள் ளது. (ஓ-30)




## சமகால தகவல் தொழில் நுட்பம் நூல்வெளியீடும் கருத்தரங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி கணனி மாணவர் ஒன்றிய அனுசரணை யுடன் நடத்தப்படும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப விரிவுரையாளர் சீ. செல்வ நாயகம் எழுதிய சமகால தகவல் தொழில் நுட்பம் என்னும் நூல் வெளியீடும், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கருத்தரங்கும் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ் வைத்தீஸ்வராக் கல்லூரி விவேகா னந்தா மண்டபத்தில் கல்லூரி அதிபர் நா. வன்னியசிங்கம் தலைமையில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே. கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன், சிறப்பு விருந்தினர் களாக யாழ். பல்கலைக்கழக முகாமைத்து வக் கற்கைகள் வணிகபீட பீடாதிபதி க. தேவராசா, யாழ். தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி. அருளானந்தம், யாழ் பல்கலைக்கழக கணனியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் டாக்டர். இ. வை. ஏ. சாள்ஸ், யாழ் உயர் தொழில்நுட்ப நிறுவன இயக்குநர் டாக்டர் எஸ். ஜெ. எம். சகாயன், யாழ். மாவட்ட செயலக பிரதம கணக்காளர் க. சண்முகரட்ணம், சட்டத்தரணி செல்வி ஞானலோஜினி சிவஞானம், யாழ். மாவட்ட செயலக உதவி சமுர்த்தி ஆணையாளர் ரி. மகேஸ்வரகுமார் ஆகியோர் கலந்து கொள் ளவுள்ளனர்.

மேலும் நூல் வெளியீட்டுரையையும் ஆய்வுரையையும் தீவக வலய தகவல் தொழில்நுட்ப வலய இணைப்பாளரும் சேவைக் கால ஆசிரியருமான என். அம்பிகைபாகன் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பத்தின் முக்கியத்துவமும் இணைய முகா மைத்துவத்தின் இன்றைய தேவைப்பாடும் என்னும் விடயம் பற்றி (Speed it net) பிரதம நிறைவேற்று அதிகாரி த. தவரூபன் கருத் துரை வழங்கவுள்ளார்.

நிகழ்வில் பிரதமவிருந்தினர் நூலை வெளியிட்டுவைக்க யாழ். இலங்கை வங்கி யின் இளநிலை அதிகாரி ரி. கணேஷமூர்த்தி முதற்பிரதிகளை பெற்று கொள்ளவுள் ளார். (ஓ-4)

## தனங்கிளப்பு வயல் நிலங்கள் கையளிக்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கு மீளக்குடியமர்வோர் சங்கத்தின் தனங்கிளப்பு வயல் நிலங்களைக் கையளிக்கும் நிகழ்வு இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வு தவிர்க்கமுடியாத காரணத் தால் முன்னர் அறிவித்த நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தென்மராட்சி தெற்கு மீளக்குடியமர்வோர் சங்கச் செயலாளர் தி.தங்கவேலு அறிவித்துள்ளார். (ஓ)

## திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு முகிலனின் "முகில்" பல்சுவை இலக்கிய தமிழ் இதழின் பிரதான காரியாலை யம் நாளை மறுநாள் திங்கட்கிழமை காலை 11மணிக்கு நெடுந்தீவில் திறந்து வைக்கப்பட் வுள்ளது.

முகிலனின் மனத்திரை மேகங்கள், ஃ, கிறுக்கி, கனவுகளின் வாசகன், அகதியின் முகம் ஆகிய கவிதை நூல்களின் ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## செயலமர்வு

(சாவகச்சேரி)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தினரால் தென்மராட்சி பிரதேசத்தின் 5 மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்கள் ஊடாக சங்க அங்கத்தவர்களுக்கு சுயதொழில் முயற்சி உதவிக்கடன் வழங்கப்படவுள்ளது.

இதில் வரணி, இயற்றாலை, கெற்பெலி, நாவற்குழி, கைதடி, கச்சாய் ஆகிய மாதர் கிராம அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள் பயனடைய உள்ளதாக தெரிவிக்கப்பட்டு கின்றது. (ஓ-4-29)

✠✠

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் தரம் 6 முதல் 11 வரை ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் நிலையத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

✠✠

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய பாடசாலை களில்தரம் 6 முதல் 9 வரை செயன்முறை தொழில்நுட்பம் கற்பிக்கும் ஆசிரியர்களுக் கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30 முதல் மாலை 4.00 மணி வரை நெல்லியடி மத்தி மகா வித்தியா லயத்தில் நடைபெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ஓ-4-19)

✠✠

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாட சாலை களில் தரம் 10, 11 இற்கு தமிழ்ப்பாடம் கற்பிக் கும் ஆசிரியர்களுக்கான வாண்மை விருத் திச் செயலமர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கேட்போர்கூடத்தில் நடைபெறவுள் ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தன் அறி வித்துள்ளார். (ஓ-4-29)

## மூத்த பிரஜைகள் மற்றும் மாற்று வலுவுள்ளோர் தின விழா

(அல்வாய்)

வடக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தினால் நடத்தப்படும் யாழ். மாவட்ட சர்வதேச மூத்த பிரஜைகள் மற்றும் மாற்றுவலுவுடையோர் தின விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் 5 மணி வரை யாழ்.மத்திய கல்லூரி மண்ட பத்தில் யாழ்.பிராந்திய ஆணையாளர் திருமதி சிவலிங்கம் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினராக கரித் தாஸ் - கியூடெக் நிறுவன இயக்குநர் அருட் தந்தை எஸ்.ஜெயக்குமார் கலந்துகொள்ள வுள்ளார். (ஓ-4-19)


## தேச நிர்மாணிகள் சங்க பிரதிநிதிகள் ஜனாதிபதியுடன் சந்திப்பு

(வடமராட்சி)

தேச நிர்மாணிகள் சங்க யாழ். பிரதிநிதிகள் மூவர் சமூக சேவைகள் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா அவர்களின் ஏற்பாட்டில் கொழும்பு சென்று இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நாளை மறுநாள் திங் கட்கிழமை அன்று சந்தித்து கலந்துரையாட வுள்ளனர்.

இவர்கள் ஒப்பந்த வேலைகளில் ஏற்படு கின்ற பல்வேறுபட்ட முக்கிய பிரச்சினைக ளைப் பற்றியும், வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் நீண்ட நாட்களாக விடுவிக்கப்படாமல் இருக் கும் மக்களை விடுவிக்குமாறும் வேண்டு தலை ஜனாதிபதியிடம் விடுக்கவுள்ளனர். இக் குழுவில் ஒப்பந்தகாரர்களான எம். ராமதாசன், எஸ். மணிராஜா, லயன் கே. யோகரட்ணம் ஆகியோர் இடம்பெறுகின்றனர். (ஓ-10)







யாழ். பஸ் நிலையம் முன்பாக நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்ட DSI காட்சி அறையை அதன் முகாமைத்துவப் பணிப்பாளர் டி.கே.ராஜபக்ஷ நாடாவெட்டி திறந்து வைப்பதையும், விற்பனையை ஆரம்பித்து வைப்பதையும் மற்றும் மக்கள் பாதணிகளைக் கொள்வனவு செய்வதையும் படங்களில் காணலாம்.

உண்மைக் காண்பது கடினமல்ல; அதைக் கண்டதும் கைவிட்டு ஓடாமல் இருப்பதுதான் கடினம்.

– ஏட்ரியன் சில்ஸன்

வலம்புரி

# இந்தியக் குழுவுக்கு மாலை சூடி நாசம் செய்து விடாதீர்கள்

ஈழத் தமிழர் படும் பேரவலத்தை நேரில் அறிய தமிழகத்திலிருந்து விசேட குழுவினர் இலங்கைக்கு வருகின்றனர்.

இலங்கை வரும் குழு யாழ்ப்பாணத்துக்கும் விஜயம் செய்யவிருப்பது ஆறுதலைத் தருகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு மற்றும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியின் மகள் கனிமொழி ஆகியோர் அடங்கிய குழு யாழ்ப்பாணத்துக்கு வருவது மிகப் பெரும் முக்கிய நிகழ்வாகும்.

இந் நிகழ்வு ஈழத் தமிழர் தொடர்பில் இந்திய நிலைப்பாட்டில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் அரிய வாய்ப்பாகும்.

இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழு யாழ்ப்பாணத்துக்கு வருகின்றதெனில்– இலங்கை அரசு அதற்கு எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் அனுமதி வழங்கியுள்ளதாயின் நிலைமை எவ்வாறு மாறியுள்ளது என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே யாழ்ப்பாணத்துக்கு வருகின்ற குழுவுக்கு எமது வாழ்வியல் பிரச்சினையைச் செம்மையாக எடுத்துக் கூற வேண்டும். அதில்,

❖ முகாம்களில் அடைக்கப்பட்டு வாழ்விற்காகப் பரிதவிக்கும் சுமார் மூன்று இலட்சம் தமிழ் மக்களின் அவல நிலைக்கு முடிவு.

❖ நீண்ட காலமாக நீடித்து வரும் இனப் பிரச்சினைக்குப் பொருத்தமான அரசியல் தீர்வு.

❖ சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளின் விடுதலை.

ஆகிய விடயங்களை முதன்மைப்படுத்த வேண்டும்.

இருந்தும் இது நடக்கும் என்று நாம் நம்ப முடியாது. ஏனெனில் மங்கல வாத்திய இசை முழங்க மலர் மாலை, பொன்னாடை, தலைப்பாகை என எல்லா சோடச உபசாரங்களும் சூடி, வந்தவர்களைக் குளுமைப்படுத்த அவர்கள் இங்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்ற முடிபோடு நாடு திரும்புவர்.

எனவே அன்புக்குரியவர்களே! எங்களை விடுதலை செய்யுங்கள் எனக் கதறும் முகாம் மக்களை ஒரு கணம் சிந்தியுங்கள்.

தாயை, பிள்ளையை, தந்தையை, உறவை ஒட்டுமொத்தமாக யுத்த வெறிக்குப் பலியாக்கி விட்டு சித்தப் பிரமையில் தவிக்கும் எங்கள் அப்பாவி மக்களை நினையுங்கள்.

அவர்களின் அவலம் பற்றி எடுத்துக் கூறுங்கள். இதைவிடுத்து வலிகாமம் வடக்கில் மீள் குடியேற்றம், மீன்பிடித் தடை, பாஸ் நடைமுறை என்ற சில்லறைகளை முன்மொழிந்து நிலைமையை பாழாக்கி விடாதீர்கள்.

மாலை வேண்டாம், மங்கல வாத்தியம் வேண்டாம். எங்கள் துயரைச் சொல்லி அழுவோம். சோதரன் முத்துக்குமாரன் எதற்காகத் தீக்குளித்தானோ! அந்த நிலை இங்கு இருப்பதை உறுதி செய்வோம்.

என்னருமை சோதரரே! இந்தியக் குழுவுக்கு எந்த மாலையும் அணிவிக்காதீர்கள். அவர்கள் எங்கள் இழப்பின் துன்பம் பகிர வருகின்றார்கள். அதை நாசம் செய்து விடாதீர்கள்.

# நாட்டில் டெங்கு காய்ச்சலால் பலியானோர் எண்ணிக்கை 257 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் இவ்வாண்டு டெங்கு காய்ச்சலினால் பலியானோர் எண்ணிக்கை 257 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

சில மாதங்களுக்குள் பதிவாகியுள்ள தகவல்களின் படி டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 133 என்று தெரிவிக்கப்படுகின்றது.

அநேகமான நோயாளர்கள் கண்டி மாவட்டத்திலேயே அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் மூவாயிரத்து 714 பேர் அங்கு இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களின் 37 பேர் மரணமடைந்துள்ளனர். டெங்கு காய்ச்சலினால் மரணித்தோர் எண்ணிக்கை கம்பஹா மாவட்டத்திலேயே அதிகரித்துக் காணப்படுகிறது. அங்கு மூவாயிரத்து 457 நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ள நிலையில் 49 பேர் மரணமடைந்துள்ளனர்.

அத்துடன் கொழும்பு, கேகாலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலும் அநேகமான டெங்கு நோயாளர்கள் அடையாளங் காணப்பட்டுள்ளனர் எனவும் சிலர் மரணமடைந்துள்ளனர் எனவும் பதிவாகியுள்ளது. (ஓ–6)

# மன்னாரில் இந்துமாமன்றம் நடத்தும் கருத்தரங்கு

(கொழும்பு)

அகில இலங்கை இந்துமாமன்றம் மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றியத்துடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிவதொண்டர் அணி பயிற்சியும் ஆன்மீக எழுச்சிக் கருத்தரங்கும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் மன்னார் திருக்கேதீஸ்வர ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அமெரிக்க ஹவாய் சைவ ஆதினத்தை சேர்ந்த தவத்திரு ரிஷி தொண்டு நாதன் சுவாமி பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

காலை 6 மணிக்கு திருவாசக முற்றோதல் நிகழ்வு இடம் பெறவுள்ளது. தொடர்ந்து மன்னார் மாவட்ட இந்து ஆலயங்களின் ஒன்றிய தலைவர் வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் தலைமையில் காலை நிகழ்வுகள் 9 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

இந்நிகழ்வில் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் 'எங்கள் சமயம் ஒரு வாழ்வியல் நெறி' எனும் பொருளிலும் , அருள் மொழியரசி வசந்தா வைத்தியநாதன் *சிவதொண்டு* என்னும் பொருளிலும் சிறப்புரையாற் றவுள்ளனர்.


இந்துமாமன்ற உபதலைவர் சின்னத்துரை தனபாலா தலைமையில் மாலை நிகழ்வுகள் பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

இதில் கம்பவாரிதி இ. ஜெயராஜ் 'சிவத்திருமேனிகள்' எனும் பொருளிலும் , வைத்திய கலாநிதி மு. கதிர்காமநாதன் சிவதொண்டரின் பணிகள் எனும் பொருளிலும் சிறப்பு ரையாற்றவுள்ளனர். இதனைத்தொடர்ந்து இந்து மாமன்ற உதவி செயலாளர் ந. கார்த்திகேயனின் தியானப்பயிற்சியும் இடம் பெறவுள்ளது.

நாளை நிகழ்வுகள் காலை 9 மணிக்கு இந்துமாமன்ற சமய விவகாரம் குழுத்தலைவர் க. ஜெகதீஸன் தலைமையில் நடைபெறவுள்ளது. விசேட நிகழ்வாக *ஐயம் தெளிதல்* கேள்வி-பதில் அரங்கு இடம் பெறவுள்ளது. (ஓ)

# எதிர்வரும் பொதுத் தேர்தல்களின் போது ஜே.வி.பி பாரிய தோல்வியை எதிர்நோக்கும்

## விமல் வீரவன்ச தெரிவிப்பு



(கொழும்பு)

எதிர்வரும் 2010 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தல்களின் போது ஜே.வி.பி பாரிய பின்னடைவை எதிர் நோக்குமென தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

தென் மாகாணத்தில் இருந்து ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையேனும் ஜே.வி.பியினால் அனுப்பி வைக்க முடியாத நிலை ஏற்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

தென்மாகாண சபைத் தேர்தல்களை முன்னிட்டு நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜே.வி.பி. தொடர்பான மக்கள் அபிமானம் நாளுக்கு நாள் வலுவிழந்து செல்வதாக அவர் தெரிவித்துள்ளார். (ஓ–6)

# கோப்பாய் பிரதேச செயலகத்தில் முதியோர் மாற்று வலுவுடையோர் தின நிகழ்வு

(கொழும்பு)

தமது வாழ்நாள் முழுவதும் தமது குடும்பத்திற்காகவும் அதனூடாக சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்து முதுமை அடைந்துள்ளவர்களையும், மாற்று வலுவுள்ளோரையும் கௌரவிக்கும் பொருட்டு நேற்று வெள்ளிக்கிழமை கோப்பாய் பிரதேச செயலகத்தில் முதியோர், மாற்று வலுவுடையோர் தின நிகழ்வு அனுஷ்டிக்கப்பட்டது.

கோப்பாய் பிரதேச செயலாளர் சி. ஏ. மோகனறாஸ் தலைமையில் நடைபெற்று இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா உரைநிகழ்த்துகையில்,

தமது ஆரோக்கியமான வாழ்க்கையின் ஊடாக சமூகத்தின் முன்னோடிகளான முதியோர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்றும், மாற்று வலுவுடையோரை கௌரவிக்கும் பொருட்டு இத்தகைய விழாக்கள் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்றும் முதியோர்கள் கேட்டல், வாசித்தல், பார்த்தல் என்பனவற்றினூடாகத் தாம் பெற்ற அனுபவங்களை அடுத்துவரும் இளைய தலைமுறையினருக்கு வழங்க வேண்டும் என்றும் தெரிவித்தார்.

முதியவர்கள் கௌரவமாகவும், பண்பாகவும் சமூகத்தில் மதிக்கப்படும் மூத்த பிரஜைகள் என்பதால் அவர்கள் சிறந்த வழிகாட்டிகளாகச் செயற்படுவதற்கான முன்னோடி நடவடிக்கையாக இத்தகைய விழாக்கள் அமைய வேண்டுமெனத் தெரிவித்த அமைச்சர் இன்றைய நிகழ்ச்சிகள் யாவும் நன்கு திட்டமிடப்பட்டு மிகவும் நேர்த்தியாக நடாத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்ததுடன், கோப்பாய் பிரதேச செயலகத்தினருக்கு தனது பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

முதியோர்கள் தாம் பெற்றுக் கொண்ட அனுபவங்களின் ஊடாக வளர்ந்து வரும் இளம் சமுதாயத்தினருக்குச் சிறந்த வழிகாட்டிகளாகத் திகழ வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட அமைச்சர் முதியோர்களைக் கௌரவிக்கும் வகையில் பல்வேறு பரிசில்களையும் வழங்கினார்.

இதேவேளை இவ்விழாவில் குறிப்பாக 96 வயதினைக் கடந்த மூன்று முதியவர்களை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவித்ததுடன் பரிசில்களையும் வழங்கினார். மேற்படி நிகழ்வில் பல்வேறு இசை ,நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஓ–6)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

## மனதின் ஆற்றல்கள்



சிந்தனையின் தொண்ணூறு சதவிகித ஆற்றல் சாதாரண மனிதனால் வீணாக்கப்படுகிறது. எனவே தொடர்ந்து அவன் பெரிய தவறுகளைச் செய்து கொண்டே இருக்கிறான். சரியான பயிற்சியைப் பெற்ற மனிதனோ மனமோ ஒருபோதும் தவறு செய்வதில்லை.

அற்ப இதயமுடைய மனிதர்களிடமிருந்து எந்த உருப்படியான வேலையை நீ எதிர்பார்க்க முடியும்? இந்த உலகில் எதையும் அவர்களிடமிருந்து நீ எதிர்பார்க்க முடியாது! நீ கடலைக் கடக்க விரும்பினால் இரும்பைப் போன்ற மன உறுதி உன்னிடம் இருந்தாக வேண்டும். மலைகளைத் துளைத்துச் செல்வதற்குப் போதுமான வலிமை உனக்கு இருக்க வேண்டும்.

# உடலை தகனம் செய்யும் போது வெளியாகும் சக்தியின் மின்சாரம்

உடல்கள் எரியூட்டப்படும் போது வெளியாகும் எரி சக்தியைப் பயன்படுத்தி குளிர்சாதன பெட்டிகளுக்கு தேவையான மின் சாரத்தை உற்பத்தி செய்யும் முறையை தாய்வானில் . மின் தகன அரங்கத்தை சேர்ந்த அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

தாய்பேயில் உள்ள இரண்டாம் எண் தகன மலர்ச் சாலை தகனத்தின் போது வெளியாகும் வெப்பத்தில் இருந்து மின்சக்தி தயாரிக்கும் பணியில் இரண்டு இலட்சம் டொலர்களுக்கும் அதிகமாக முதலீடு செய்துள்ளது.

சுற்றுச் சூழலுக்கு உகந்த ஒரு திட்டம் என்று உள்ளூர் ஊடகங்கள் இதை ஆதரித்தாலும், இறந்தோரின் உறவினர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாமல் இத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக எதிர்ப்புக்களும் எழுந்துள்ளன. (ஓ-6)

# இலங்கைத் தமிழர்கள் தாங்கள் விரும்பும் இடத்திலேயே குடியமர்த்தப்பட வேண்டும்

## வரதராஜன் தெரிவிப்பு

இலங்கை அகதிமுகாம்களை அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட வேண்டும் என்று மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் வரதராஜன் கூறியுள்ளார்.

கடலூரில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சென்னையில் எதிர்வரும் 27 ஆம் திகதி தீண்டாமை ஒழிப்பு முன்னணி இயக்கத் துடன் சேர்ந்து முக்கிய கோரிக்கைகளை வலியுறுத்தி மிகப் பெரிய அளவில் பேரணி நடத்த உள்ளோம். தமிழகத்தில் நிலவும் விலை வாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும். இலங்கையில் உள்ள அகதிகள் முகாம்களை அதிகாரிகள் நேரில் சென்று பர்வையிட வேண்டும். அப்போது தான் அவர்கள் எந்தச் சூழ் நிலையில் உள்ளனர் என்பது தெரிய வரும். இலங்கைத் தமிழர்கள் விரும்புகிற இடத்திலேயே குடியமர்த்தப்பட வேண்டும். இப்பிரச்சினையில்மத்திய அரசு உடனடியாக தலையிடவேண்டும் என்றார். (ஓ)

# அமெரிக்க வீட்டில் திருடர்கள் நுழைந்ததை பிலிப்பைன்ஸிலிருந்து கண்டுபிடித்த பெண்

அமெரிக்க விமானப்படையில் தலைமையதிகாரியாக பணிபுரிகிறார். ஜிம் சோய்னாட் இவர் வெளிநாட்டுக்கு சென்று இருந்த போது பிலிப்பைன்ஸ் நாட்டை சேர்ந்த மேரி பெல்லை சந்தித்தார். இருவரும் திருமணம் செய்து கொண்டனர். மேரிபெல்லுக்கு அமெரிக்காவில் குடியேறுவதற்கான விசா இன்னும் கிடைக்கவில்லை. இதனால் அவர் தன் தாய் நாட்டில் தங்கி இருக்கிறார். இவர்கள் இருவரும் வெப்கமரா மூலம் ஒருவரை ஒருவர் பார்த்து பேசிக்கொள்வார்கள்.

சம்பவத்தன்று மேரிபெல் கணவரை தொடர்பு கொள்வதற்காக வெப்கமராவை இயக்கினார். அப்போது ஓக்லஹாமா நகரில் உள்ள அவர்கள் வீட்டில் 2 கொள்ளைக் காரர்கள் புகுந்து இருப்பது கமரா மூலம் தெரியவந்தது. உடனே அவர் தன் கணவரை தொடர்புகொண்டு வீட்டுக்குள் கொள்ளைக் காரர்கள் புகுந்து இருப்பது பற்றி தெரிவித்தார். அவர் பொலிஸாருக்கு தெரிவித்தார். பொலிஸார் விரைந்து சென்று கொள்ளைக் காரர்கள் 2 பேரையும் கைதுசெய்தனர். (ஓ)

# இலங்கை அகதிகளுக்கு வேண்டிய அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டுள்ளன

## காவல்துறை கூடுதல் இயக்குனர் தாக்குதல்

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாக வந்துள்ளவர்கள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளது என காவல்துறை தெரிவித்துள்ளது. காவல்துறை கூடுதல் இயக்குனர் (சட்டம் ஒழுங்கு ) வெளியிட்டுள்ள அறிக்கையில் ,

இலங்கையிலிருந்து தமிழகத்திற்கு அகதிகளாய் வந்தவர்களில் 73 ஆயிரத்து 210 பேர் இலங்கைத் தமிழர்களுக்கான 114 அகதி முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு அனைத்து வசதிகளும் தமிழக அரசால் செய்து தரப்பட்டுள்ளது. இது தவிர 31 ஆயிரத்து 398 பேர் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் காவல் நிலையத்தில் பதிவு செய்து கொண்டு வெளிப்பதிவு அகதிகளாக தங்கியுள்ளனர். இது தவிர தற்போது 64 இலங் கைத் தமிழர்கள் மட்டும் செங்கல்பட்டு மற்றும் பூந்தமல்லி இலங்கை அகதிகளுக்கான சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பலர் இந்தியாவில் தடை செய்யப்பட்ட விடுதலைப்புலிகளுக்கு வெடிமருந்தும் சிலர் விடுதலைப்புலிகள் இயக்கத்தி லிருந்து வெளியேறி வந்து இயக்க நடவடிக்கை களுக்காக தகவல் தொடர்பு மற்றும் பொருட் களை வாங்க உதவியவர்கள். இவர்களில் வழக்குகள் முடிந்த 10 நபர்களுக்கு அவர் கள் விரும்பியபடி வெளி நாடுகளுக்கு செல்ல தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவர்கள் இந்தியாவிலேயே தங்கியிருக்க அனுமதி கோருகின்றனர். இவர்களது கோரிக் கையை நாட்டின் பாதுகாப்பு காரணங் களுக்காக ஏற்க இயலாது.

கடந்த மூன்று மாதத்தில் சிறப்பு முகா மில் தங்கியிருந்து வழக்குகளை சந்தித்துக் கொண்டிருந்தவர்களில் உடல் நலம் குன்றியவர்கள் ,வயதானவர்கள் 45 நபர்களின் கோரிக்கையை தமிழக அரசு பரிசீலனை செய்து அவர்கள் விரும்பியபடி தமிழகத்தி லுள்ளதிறந்த முகாம்களிலோ அல்லது வெளிப் பதிவிலோ தங்கியிருக்க அனுமதி வழங்கி சிறப்பு முகாமில் இருந்து விடுவிக்கப்பட்டுள் ளனர். செங்கல்பட்டு மற்றும் பூந்தமல்லி சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டு வழக்குக ளில் சம்பந்தப்பட்டுள்ள இலங்கைத் தமிழர் கள் மீதுள்ள வழக்குகள் முடிந்தபின் இவர்க ளது கோரிக்கை பரிசீலனை செய்யப் படும் இவ் வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)

# ஆப்கானிய தலைநகர் காபூலில் இந்தியத் தூதரகத்துக்கு அருகே வெடிகுண்டுத் தாக்குதல் -17 பேர் பலி

ஆப்கானிய தலைநகர் காபூலில் 17 பேர் கொல்லப்படுவதற்கும் மேலும் 63 பேர் காயமடைவதற்கும் காரணமான தற்கொ லைக் குண்டுத்தாக்குதலை தாமே நடத் தியதாக தலிபான்கள் கூறுகிறார்கள். அலு வலக நேரம் ஆரம்பமாவதற்கு முன்னதாக காபூலில் இருக்கின்ற இந்திய தூதரகத்துக்கு வெளியே சக்தி மிக்க கார் குண்டு ஒன்று வெடித்தது.

இந்திய தூதரகத்தையே தாம் இலக்கு வைத்ததாக தமது இணையத் தளத்தில் ஒரு அறிக்கையில் தலிபான்கள் கூறியுள்ளனர். தமது தூதரக பணியாளர்கள் எவரும்இதில் கொல்லப்படவில்லை என்று இந்திய வெளியுறவுச் செயலர் கூறியுள்ளார். ஆப்கானிஸ்தானின் பெரிய வெளிநாட்டு கொடையாளி நாடுகளில் இந்தியாவும் ஒன்று. (ஓ-6)


# வேலைவாய்ப்பு



இலங்கையில் முன்னணி காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான

## யூனியன் அஷ்யூரன்ஸ்

யாழ். பிரதான கிளைக்கு பின்வரும் பதவிகளுக்கு

தகுதியானவர்களுக்கு உடனடி நியமனம் வழங்கவுள்ளது

## பதவி வெற்றிடங்கள்

- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் — பதவி -5
- தனிப்பட்டோர் நிதி முகாமையாளர் — பதவி -4
- சிரேஷ்ட தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் — பதவி -3
- தனிப்பட்டோர் நிதி ஆலோசகர் — பதவி -2
- உதவி முகவர் அபிவிருத்தி முகாமையாளர் — பதவி -9
- முகவர் அபிவிருத்தி முகாமையாளர் — பதவி -8
- உதவி முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் — பதவி -7
- முகவர் அபிவிருத்தி உத்தியோகத்தர் — பதவி -6
- காப்புறுதி ஆலோசகர் — பதவி -1



வாகன கடன் வசதி



மோட்டார் சைக்கிள் கடன் வசதி



கணனி வசதி



கையடக்கத் தொலைபேசி வசதி

✎ தகைமை-க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உட்பட ஆறுபாடங்களில் சித்தி (ஆகக் குறைந்த தகைமை) காப்புறுதித்துறையில் அல்லது சந்தைப்படுத்தல் துறையில் முன்னனுபவம் விரும்பத்தக்கது (கட்டாயம் அல்ல)

✎ நன்மைகள்-நிரந்தர அடிப்படைச் சம்பளத்துடனான வேலைவாய்ப்பு (பதவி 6, 7, 8, 9) பயிற்சிக்காலத்தின்போது மேலதிக ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும். ஒய்வூதியம் வழங்கப்படும்.



வெளிநாட்டு சுற்றுலா

## தகைமையுடன் உங்களிடம் நாம் எதிர்பார்ப்பது?

- உங்கள் இலக்கை அடைவதற்கான உறுதியான மனோநிலை
- உங்கள் வெற்றியை நோக்கிப் பணிபுரிவதற்கானஆர்வம்
- திடசித்தம்

தோற்றுங்கள் நேர்முகத் தேர்விற்கு சுயவிபரக் கோவையுடன்

✎ நேர்முகத் தேர்வு

காலம்:- செவ்வாய்க்கிழமை 13.10.2009 நேரம் :- முற்பகல் 9.30

இடம் :- யூனியன் அஷ்யூரன்ஸ், 139, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

நமது பணத்தை செலவு செய்து வெளிநாடு சென்று பகுதிநேரம் கல்வி கற்பதிலும் பார்க்க நம் சொந்த மண்ணிலேயே கல்வியையும் கற்று எமது மக்களுக்கும் சேவை செய்து உழைத்து மகிழ்வதற்கு ஒரு அரிய வாய்ப்பு

யூனியன் அஷ்யூரன்ஸில் இணைவதன் ஊடாக நீங்கள் காப்புறுதி உலகில் அங்கீகரிக்கப்படுகிறீர்கள்

தொடர்புகளுக்கு 021-222 3753
0774053274

அ.அன்ரன்
விற்பனை முகாமையாளர்

(C/3450)

# நியூ சவுத் வேல்ஸ் அணி 59 ஓட்டங்களால் வெற்றி

(டில்லி)

ஹட்ரிச், ஸ்ரூவட் கிளார்க்கின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நியூ சவுத் வேல்ஸ் அணி 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஈகிள்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியாவில் நடைபெற்று வரும் உள்ளூர் இருபது-20 போட்டிகளில் சம்பியனான எட்டு அணிகளுக்கிடையிலான சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது லீக் போட்டியில் அவுஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ், தென்னாபிரிக்காவின் ஈகிள்ஸ் அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய நியூ சவுத் வேல்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 144 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சைமண்ட்ஸ் ஹட்ரிச் 41 பந்துகளில் (6 பவுண்டரிகள், 2 சிக்ஸ்சர் உட்பட) 53 ஓட்டங்களையும் ஹென்ரி ஹயூஸ் 27, வோர்ணர் 23, ஹோரர் ஆட்ட மிழக்காமல் 22 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் ஸ்கால்வைர் 2விக் கெட்டுக்களையும் பிரீஸ், பிற் ஷாவ், பெய்லி ஆகியோர் தலா ஒரு விக் கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஈகிள்ஸ் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 91 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 53 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் மைக்சாரன் 37 பந்துகளில் (4 பவுண்டரிகள், ஒரு சிக்சர் உட்பட) 40 ஓட்டங்களை எடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரூவெட் கிளார்க் 3 விக்கெட்டுக்களையும் ஹென்ரி ஹயூஸ் 2 விக்கெட்டுக்களையும் பிரெட் லீ, ஹயூரிச் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் பிரிவு பியைச்சேர்ந்தநியூ சவுத்வேல்ஸ்அணி 2 புள்ளியைப்பெற்றது. இப்போட்டியில் நியூ சவுத் வேல்ஸ் அணி யின்ஹட்ரிச் ஆட்டநாய கனா கத் தெரிவா னார்.

# விக்டோரியா அணியிடம் வீழ்ந்தது டில்லி அணி

மைக்கேயின் சிறப்பான பந்துவீச்சில் மூலம் விக்டோரியா அணி 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் டில்லி டேர் டே வில்ஸ் அணியை வீழ்த்தியது. சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரில் நேற்று நடைபெற்ற லீக் சுற்றின் மூன்றாவது போட்டியில் பிரிவு டி.யை சேர்ந்த இந்தியாவின் டில்லி டேர் டேவில்ஸ் அணியும் அவுஸ்திரேலியாவின் விக்டோரியா அணியும் மோதின. இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி 20 ஓவர் களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 98 ஓட்டங்களை எடுத்தது. இதில் மான்கஸ் 25 ஓட்டங்களை யும் சேவாக் 21, டில்சான் 18 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில் மைக்கே 3 விக் கெட் டுக்களையும் ஹார்வூட், மைக்டொனால்ட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். பதிலுக்கு துடுப்பெடுத் தாடிய விக்டோரியா அணி 16.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 100 ஓட்டங்களை எடுத்தது 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது. இதில் குயினி 33 பந்துகளில் (4 பவுண்டரிகள், 3 சிக்ஸ்சர்கள் உட்பட) 40 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் கமரூன்வைற் 22, பிலிஸ்ஸார் 15 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்துவீச்சில மிஷ்ரா, டில்சான் மற்றும் பாத்தியா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர். இப் போட்டியில் ஆட்டநாயகனாக விக்டோரியா அணியின் மைக்கே தெரிவானார்.

# விஸ்டன் சிறந்த வீரர் விருது பங்களாதேஷின் அல் ஹசனுக்கு

(லண்டன்)

பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர் சகிப் அல் ஹசன் விஸ்டன் வழங்கும், ஆண்டின் சிறந்த டெஸ்ட் வீரர் விருதை கைப்பற்றினார்.

டெஸ்ட் போட்டிகளில் சிறப்பாக செயல்படும் வீரர்களுக்கு ,பிரபல கிரிக்கெட் இதழான விஸ்டன் ஆண்டுதோறும் விருது வழங்கிக் கௌரவித்து வருகின்றது. இந்த ஆண்டுக்கான விருதை பங்களாதேஷ் சகலதுறை வீரர் சகிப் அல்ஹசன் கைப்பற்றினார்.

கடந்த 2008 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் முதல் 2009 ஆகஸ்ட் வரையிலான காலங்கள் விருதுக்கு கணக்கில் கொள்ளப்பட்டன. இக்கால கட்டத்தில் 8 போட் டிகளில் விளையாடியுள்ள சகிப், 45 விக்கெட், 498 ஓட்டங்கள் குவித்துள்ளார்.

இப்பட்டியலில் இரண்டாவது இடத்தை இந்திய வீரர் கௌதம் காம்பீர் தட்டிச் சென் றார். இந்த ஆண்டுக்கான விஸ்டன் பட்டியலில் முதல் 5 இடத்தை பெற்ற வீரர்கள்,

| வீரர் | அணி | போட்டிகள் | சராசரி |
|---|---|---|---|
| சகிப் அல் ஹசன் | பங்களாதேஷ் | 8 | 7.94 |
| காம்பீர் | இந்தியா | 8 | 7.63 |
| சிமித் | தென்னாபிரிக்கா | 7 | 7.21 |
| டெண்டுல்கர் | இந்தியா | 9 | 7.00 |
| கலிஸ் | தென்னாபிரிக்கா | 8 | 7.00 |

# ஆஷஸ் டெஸ்ட் தொடர் அட்டவணை அறிவிப்பு

(மெல்பேர்ன்)

2010-2011 ஆம் ஆண்டுக்கான ஆஷஸ் தொடர் அட்டவணை நேற்று அறிவிக்கப்பட்டது. முதல் டெஸ்ட் பிரிஸ்பேனில் அடுத்த ஆண்டு நவம்பர் 25ஆம் திகதி ஆரம்பமாகிறது.

இங்கிலாந்து-அவுஸ்திரேலியா அணிகள் மோதும் வரலாற்று சிறப்பு மிக்க ஐந்து டெஸ்ட் போட்டிகள் கொண்ட ஆஷஸ் தொடர் அவுஸ்திரேலியாவில் அடுத்த ஆண்டு நடக்க உள்ளது. இதற்கான அட்டவணையை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை நேற்று முன்தினம் அறிவித்தது.

முதல் டெஸ்ட் பிரிஸ்பேனில் அடுத்த ஆண்டு நவம்பர் 25-29ஆம் திகதிகளில் பிரிஸ்பேனில் நடக்கிறது. இரண்டாவது டெஸ்ட் அடிலெய்டிலும் (டிச.3-7) மூன்றாவது டெஸ்ட் பேர்த்திலும் (டிச.16-20) நான்காவது டெஸ்ட் மெல்பேர்னிலும் (டிச.26-30) ஐந்தாவது டெஸ்ட் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3-7ஆம் திகதிகளில் சிட்னியில் நடக்கிறது.

சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த இத்தொடரில் ஸ்ரொரஸ் தலைமையிலான இங்கிலாந்து அணி கோப்பை வென்று சாதித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# டுமினி அசத்தலான துடுப்பாட்டம் பெங்களூர் அணியை வீழ்த்தியது கோப்ராஸ்

(பெங்களூர்)

சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடரின் முதல் போட்டியில் கும்பிளே தலைமையிலான பெங்களூர் அணி அதிர்ச்சி தோல்வி அடைந்தது. கேப் கோப்ராஸ் அணியிடம் 5 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்ந்தது. டுமினியின் அதிரடி ஆட்டம் கோப்ராஸ் வெற்றிக்கு வித்திட்டது.

உள்ளூர் இருபது-20 தொடரில் சம்பியன் பட்டம் வென்ற 12 அணிகள் மோதும் சம்பியன்ஸ் லீக் இருபது-20 தொடர் நேற்று முன்தினம் பெங்களூரில் ஆரம்பமானது.

முதல் போட்டியில் சி பிரிவில் உள்ள இந்தியாவின் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ், தென்னாபிரிக்காவின் கேப் கோப்ராஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்று பெங்களூர் அணித்தலைவர் கும்பிளே துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார். ஆரம்பத்தில் கலிஸ் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றினார். இதன் பின் உத்தப்பா அசத்தலாக ஆடினார். கேப் கோப்ராஸ் பந்துவீச்சை மிக எளிதாக சமாளித்த இவர், பவுண்டரி மழை பொழிந்தார்.

ஜோண்டகி வீசிய 11வது ஓவரில் 2 சிக்ஸர் அடித்த உத்தப்பா 51 ஓட்டங் களுக்கு ஆட்டமிழந்தார். ஹெண்டர்சன் பந்தில் ஒரு சிக்ஸர் விளாசிய டிராவிட் 28 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

விராத் ஹோலி 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து அதிக நேரம் நீடிக்கவில்லை. கடைசி கட்டத்தில் ரோஸ் ரெய்லர் வாணவேடிக்கை காட்டினார். பெங்களூரு ரோயல் ஸ்ரார்ஸ் அணி 20 ஓவரில் 4 விக்கெட்டுக்கு 180 ஓட்டங்களை எடுத்தது. ரோஸ் ரெய்லர் 53(4 பவுண்டரிகள், 4 சிக்சர் உட்பட) மனிஷ் பாண்டே 10 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தணர்.

## டுமினி கலக்கல்

கடின இலக்கை விரட்டிய கேப் கோப்ராஸ் அணிக்கு ஆரம்பத்தில் அதிர்ச்சி. பிரவீண் குமார் வீசிய முதல் ஓவரில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட கிப்ஸ் பூச்சியத்துடன் ஆட்டமிழந்தார். பட்டிஸ் 11 ஓட்டங்களுடனும், டேவிட்ஸ் 27 ஓட்டங்களும், ஆன்டாங் 19 ஓட்டங்களும், கேனிங் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

ஒருபக்கம் விக்கெட் வீழ்ந்தாலும் மறுபக்கம் தனிநபராக போராடினார் டுமினி. அசத்தலாக ஆடிய இவர் அரைசதம் கடந்து அணிக்கு கைகொடுத்தார்.

கடைசி ஓவரில் 9 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலை ஏற்பட்டது. வினய் குமார் பந்துவீசினார். 2 ஆவது பந்தில் ஒரு சிக்சர் அடித்த டுமினி வெற்றியை உறுதி செய்தார். நான்காவது பந்தில் கிலெய்ன்வெல்ட் ஒரு பவுண்டரி அடிக்க கோப்ராஸ் அணி 19.4 ஓவரில் 5 விக்கெட்டுக்கு 184 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது.

52 பந்தில் 99 ஓட்டங்களுடன் (8 பவுண்டரி, 5 சிக்சர் அடங்கலாக) ஆட்டமிழக்காமல் இருந்த டுமினி சதம் அடிக்கும் வாய்ப்பை நழுவ விட்டார். இவரே ஆட்ட நாயகன் விருதை தட்டிச் சென்றார்.





பொன். நந்தவர்மனின் தேசப்படத் தொகுதி நூல் வெளியீட்டுவிழாவில், நூலின் முதல் பிரதியை வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வைசெல்வராஜாவிடமிருந்து மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் மு.கனகலிங்கம் பெற்றுக் கொள்வதையும் அருகில் நூலாசிரியரையும் கல்விப்பணிப்பாளர் வை. செல்வராஜா உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# இரண்டு கால்களையும் இழந்த மாணவன் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இணைவு

(யாழ்ப்பாணம்)

வவுனியா இடைத்தங்கல் முகாம்களில் இருந்து யாழ் பல்கலைக்கழ்கத்தில் தமது பட்டப்படிப்பைத் தொடர்வதற்காக அழைத்து வரப்பட்ட மாணவர்களில், இரண்டு கால்களையும் இழந்த மாணவன் ஒருவர் யாழ். மருத்துவ பீடத்தில் இணைந்துள்ளதாகப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

இந்த மாண்வனுக்கு யாழ். மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தனியான வசிப்பிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து, அவருடன் இருந்து அவரது தேவைகளைப் பூர்த்தி செய்து வருவதாக யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

இந்த மாணவன் புதிய சூழலில் மிகுந்த உற்சாகத்துடனும் மகிழ்ச்சியுடனும் தனது படிப்பை ஆரம்பித்திருப்பதாகவும் அவர் கூறினார்.

இடம் பெயர்ந்தோருக்கான முகாம்களில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு வந்துள்ள மாணவர்கள் பற்றி யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்ததாவது,

போர்ச்சூழல் காரணமாக காயமடைந்துள்ள வேறு மாணவர்களும் யாழ்.பல்கலைக்கழகத்திற்கு வந்துள்ளார்கள். மேல் மாடிகளில் உள்ள வகுப்பறைகளில் நடைபெறுகின்ற விரிவுரைகளுக்கு இத்தகைய காயமடைந்த மாணவர்கள் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. அங்கு லிப்ட் வசதிகள் இல்லாமையே இதற்கான காரணமாகும்.

எனவே இத்தகைய மாணவர்களின் வசதிகருதி யாழ். பல்கலைக்கழகக் கட்டடங்களில் லிப்ட் வசதிகளை ஏற்படுத்த வேண்டிய அவசரத் தேவை எழுந்துள்ளது.

இடம்பெயர்ந் தோருக்கான முகாம்களில் இருந்து யாழ். பல்கலைக்கழகத்திற்கு வந்துள்ள மாணவர்களுக்கு மாணவர் விடுதியில் இருந்த மாணவர்களை வேறிடங்களுக்கு அனுப்பியதன் மூலம் இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஒருசில மாணவர்கள் தமது உறவினர்களது வீடுகளில் தங்கியிருந்தாலும் பெரும்பான்மையான மாணவர்கள் அந்த வசதியற்றவர்களாகவே இருக்கின்றார்கள்.

இந்த மாணவர்களின் பெற்றோர்கள், குடும்பத்தினர் இன்னும் முகாம்களிலேயே இருக்கின்றார்கள். இந்த மாணவர்கள் மாத்திரமே இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, இந்த மாணவர்களின் வருகையையடுத்து, புதியதோர் அனுபவத்தை நாங்கள் எதிர்நோக்க வேண்டியும் ஏற்பட்டிருக்கின்றது.

சில மாணவர்கள் திருமணம் முடித்து கைக் குழந்தைகளுடன் பல்கலைக்கழகத்திற்கு வந்துள்ளார்கள். அவர்களுக்கு ஏனைய மாணவர்களைப் போல விடுதிகளில் தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முடியாது. அதற்குப் பல்கலைக்கழக நடைமுறைகள் அனுமதிக்கமாட்டாது.

ஆகவே அவர்களுக்கு வெளியிடங்களில் இருப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய கட்டாய தேவை எழுந்துள்ளது. இந்தக் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதற்காக யாழ்ப்பாணத்தில் உள்ள பொது நிறுவனங்கள், சமயநிறுவனங்களை விடுதி வசதிகளை ஏற்படுத்தி இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு ஒத்துழைக்குமாறு கேட்டுள்ளோம். (ச-5)

## தமிழ்...

ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொள்கிறார்.

கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி,யாழ்.அரச அதிபர் க. கணேஷ் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். நிகழ்வில் முன்னதாக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திலிருந்து விருந்தினர்கள்,பண்பாட்டுப் பேரணியுடன் அழைத்து வரப்படுவர்.தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெறும்.

இன்றைய இறுதி நாள் விழாவில் 2008, 2009 ஆம் ஆண்டுக்கான கௌரவ ஆளுமை விருது, 2007,2008ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல் தேர்வுக்கான பரிசு என்பனவும் வழங்கப்படும்.தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெறும்.இவ்விழாவில் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பிக்குமாறு ஏற்பாட்டுக் குழுவினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (ச-5)

## தமிழர்களின் உணர்வை வெளிப்...

கனிமொழி உட்பட தமிழ் நாட்டைச் சேர்ந்த 10 இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை மேற்கொள்ளவிருக்கும் யாழ்.விஜயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்விடயம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில், எமது மக்களின் உண்மையான நிலைமைகளை வெளிப்படுத்தி இந்திய அரசின் குறிப்பாக தமிழக அரசின் உதவிகளை எமது மக்களின் மேம்பாட்டிற்காகவும் எமது பகுதிகளின் அபிவிருத்திக்காகவும் பெற்றுக் கொள்வதற்கு நாம் இந்த சந்திப்பை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் மூலம் பெறப்பட்டுள்ள 13ஆவது சீர்திருத்தத்தையும் அதற்கும் அதிகமான அதிகாரங்களையும் செயற்படுத்துமாறு தான் முன்வைத்து வந்த யோசனை தற்போது செயல் வடிவம் பெறத் தயாராகி வரும் நிலையில் இந்தியாவின் மூலமான உதவிகளை எமது பகுதிகளின் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நாம் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை தனக்கிருப்பதாகத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இந்த நிலையில் யாழ்.குடாநாட்டிற்கு வருகை தரும் தமிழகத்தைச் சேர்ந்த இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய தூதுக் குழுவினரை நாம் அனைவரும் ஒன்று திரண்டு வரவேற்பதில் எமது உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (ச-5)

## புலிகளின் தலைவர் பிரபாக...

எங்கள் மீது அனைத்துலக சமூகத்தின் அழுத்தம் இருக்கின்றது. நாங்கள் அடைந்த வெற்றியை இல்லாமல் செய்வதற்கான அழுத்தம் வெளிநாடுகளிலிருந்தும் உள்நாட்டிலிருந்தும் கொடுக்கப்படுகின்றது.

ஆனால் அது நிகழ அனுமதிக்க மாட்டோம். நாட்டைப் பின்நோக்கி நடத்திச் செல்ல ஒருபோதும் இடமளியோம். பிரபாகரன் இறந்து விட்டாலும் அவரது ஆவி இந்த நாட்டை ஆள்வதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

அந்த நிலையை நோக்கிச் செல்வதற்கு எவர் ஒருவருக்கும் உரிமை கிடையாது. எனவே இவை அனைத்தையும் மனதில் வைத்து எதிர்காலத்தை நோக்கி நாம் செயலாற்ற வேண்டும்.

இதேவேளை அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டு வரும் துறைப் பகுதியில் புதிய நிர்வாக அலுவலகத்திற்கும் நிலக்கீழ் களஞ்சியத் தாங்கிகள் அமைக்கும் திட்டத்திற்கும் ஜனாதிபதி மகிந்த அடிக்கல் நாட்டியுள்ளார்.

இந்தக் களஞ்சியத் தாங்கிகள் திட்டத்தின் கீழ் 14 தாங்கிகள அமைக்கப்படவுள்ளன. அவற்றில் 8 தாங்கிகள் கப்பல்களுக்கு நிரப்பும் எரிபொருள்களை சேமிப்பதற்கும் மூன்று தாங்கிகள் எரிவாயுவைச் சேமித்து வைப்பதற்கும் பயன்படுத்தப்படவுள்ளன.

ஏனைய தாங்கிகள் வானூர்திகளுக்கான எரிபொருள் நிரப்புவதற்குப் பயன்படுத்தப்படவுள்ளன. சீன அரச வங்கி இந்தத் திட்டத்திற்கான 85 வீத நிதியை வழங்கியுள்ளது.

அத்துடன் சீன நிறுவனங்களே அம்பாந்தோட்டைத் துறைமுகத்தையும் கட்டியெழுப்பி வருகின்றன. (ச-5)

## புலிகள் அமைப்பை மீளக்...

எனக் கூறிய பாதுகாப்புச் செயலாளர் சமாதானம் முறிவடையும் பட்சத்தில் யுத்த நடவடிக்கைகளில் பிரவேசிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என ஜனாதிபதி இந்தியாவுக்கான தனது முதலாவது விஜயத்தின்போது இந்தியத் தலைவர்களிடம் கூறிய தனையும் அவர் நினைவுகூர்ந்தார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் யுத்தத்தை நிர்ப்பந்திக்கவில்லை. ஜனாதிபதியினால் முன்னெடுத்து வரும் நடவடிக்கைகளை அழித்து புலிகள் அமைப்பை மீளக் கட்டி எழுப்புவதற்கான சதி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மனித உரிமைகள் மீறப்படுவதாகக் கூறப்படுவது இந்த சதியின் ஒரு பகுதியாகும். ஜனாதிபதி தலைமையில் நானும் முப்படைத் தளபதிகளும் புலிகளை உறுதியான திட்டமிடலின் கீழேயே அழித்தோம்.

ஜனாதிபதி இந்தியாவில் வைத்துத் தெரிவித்ததைப் போன்றே செய்தும் காட்டி விட்டார். பலர் இது வெறும் வாய்வார்த்தை என்றே நினைத்திருந்தனர். ஆனால் அவர் அதனை அத்தோடு நிறுத்தி விடவில்லை.

புலிகள் அமைப்பின் சர்வதேச தலைவரான கே.பியைக் கைது செய்து மகத்தான வெற்றியை நிலைநாட்டியதன் மூலம் உலக நாடுகளையே வியப்பில் ஆழ்த்தியுள்ளார்.

கைது செய்யப்பட்டிருக்கும் கே.பியிடம் இருந்து கிடைக்கப் பெற்ற தகவலைக் கொண்டு பார்க்கையில் புலிகளின் வலைப்பின்னல் சர்வதேச நாடுகளிடையே விசாலமாகப் பரந்துள்ளது தெரியவந்துள்ளது.

இவர்களது சொத்து விசாலமானது. பயங்கரவாதிகளை ஒழிக்கும் நடவடிக்கைகளின் போது எமது ஜனாதிபதி பல்வேறு நாடுகளின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டார் எனவும் அவர் கூறினார். (ச-5)

## 103 கர்ப்பிணித்...

இடைத்தங்கல் முகாம்களில் இன்று தற்காலிகமாகத் தங்க வைக்கப்பட்டு நாளை உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுவர் எனவும் யாழ். அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார். (ச)

## நிறைவேற்று அதிகாரம் கொண்ட...

தேர்தலில் பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பது தொர்பாக எதிர்க்கட்சி களைச் சேர்ந்த தலைவர்கள் சிலருடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரை யாடலின்போதே ரணில் விக்கிரமசிங்க இந்த இணக்கத்தை வெளியிட்டுள்ளார்.

மிகவும் குறுகிய காலத்தில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இல்லாதொழிப்பதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்துச் சட்ட ரீதியான அறிக்கையொன்றைப் பெற்றுக் கொடுக்குமாறு சிரேஷ்ட சட்டத்தரணிகள் சிலருக்கு அறிவித்துள்ள ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர், தென்மாகாண சபைத் தேர்தல் முடிபடைந்தவுடன் சகல எதிர்க்கட்சிகளுடனும் இது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த எண்ணியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க் கட்சிகளின் பொது வேட்பாளராகப் போட்டியிடுமாறு ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள பசில் அணியின் உறுப்பினரான நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் கூட்டுப்படையின் பிரதான அதிகாரியான ஜெனரல் சரத்பொன்சேகாவுடன் கோரிக்கை விடுத்திருப்பதாக எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ச-5)

## சமாதானத்...

குறித்த ஒபாமாவின் பார்வையினால் தாம் கவரப்பட்டதாகவும் மக்களுக்கு நல்ல எதிர்காலத்தை இலக்கு வைத்த தான நம்பிக்கையை ஏற்படுத்தக் கூடிய அத்தகைய பார்வை வெகு சிலருக்கே இருக்கும் என்றும் நோபல் பரிசுக் குழு கூறியுள்ளது.

ஆனால் இப்படியான ஒரு பரிசை ஒபாமாவிற்கு வழங்குவதற்கான காலம் இன்னமும் வரவில்லை என வாஷிங்டனிலுள்ள பலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை நோபல் குழுவின் இந்த முடிபு குறித்துத் தான் ஆச்சரியம் அடைவ தாகக் குறிப்பிட்டுள்ள ஒபாமா, அதனைப் பணிவுடன் ஏற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அதிபர் ஒபாமா சமாதானத்திற்காக மேலும் அதிகம் செயற்படுவதற்கு இந்த பரிசு ஊக்கம அளிக்குமென ஜேர்மன் ஆட்சித் தலைவி அஞ்சலா மெர்க்கல் கூறியுள்ளார்.

ஒபாமாவிற்குக் கிடைத்திருக்கும் இந்தப் பரிசு அவரது அமைதி முயற்சிக்குக் கிடைத்திருக்கும் வெற்றியென உலகத் தலைவர்கள் பலரும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர். (ச-5,14)

## தமிழக எம்.பிக்கள் அடங்கிய குழு...

இலங்கைக்கு வரும் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாளை விசேட விமானம் மூலம் பலாலியை வந்தடைந்து அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கை வந்தடைவர்.

அங்கு வைத்து யாழ்.மாநகர சபை முதல்வர், ஆணையாளர் ஆகியோரினால் அவர்கள் வரவேற்கப்பட்டுப் பொது நூலகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர்.

அங்கு விசேட கூட்டம் இடம்பெறும். இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, அரச அதிபர் க.கணேஷ் ஆகியோர் கலந்து கொள்வதுடன் யாழ்ப்பாண மக்களின் நிலைமைகள் குறித்தும் எடுத்துக் கூறுவர்.

இக் கூட்டத்திற்கு யாழ்.மாவட்ட அரச திணைக்களத் தலைவர்கள், அதிபர்கள், பாடசாலை ஆசிரியர்கள், வங்கியாளர்கள், மாநகர உத்தியோகத்தர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு மாநகர சபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

இச் சந்திப்பினை முடித்துக் கொண்டு யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் செல்லும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு அங்கு துணைவேந்தர், பீடாதிபதிகள் மற்றும் விரிவுரையாளர்களுடன் பேசவுள்ளதுடன் நலன்புரி முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுடனும் கலந்துரையாடுவர்.

அதன்பின் யாழ்.மாவட்டத்திலுள்ள நலன்புரி முகாம்களுக்கு நேரில் சென்று பார்வையிடுவதுடன் அங்குள்ள மக்களுடனும் பேசுவர். முட்கம்பி வேலிகளுக்குள் அடைக்கப்பட்டுள்ள மூன்று இலட்சம் முகாம் மக்களை விடுவிக்கக் கோரியும் இலங்கைக் கடற்படையினரின் தொடர்த் தாக்குதலைத் தடுத்து நிறுத்தக் கோரியும் தமிழக எம்.பிக்கள் இந்தியப் பிரதமரிடம் வலியுறுத்தினர்.

அத்தோடு இந்திய அனைத்துக் கட்சி எம்.பிக்கள் குழுவையும் முகாம்களைப் பார்வையிட அனுமதிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் தமிழகத்திலிருந்து எழுந்தது. இந்நிலையில் தி.மு.கவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் மத்திய அமைச்சருமான டி.ஆர்.பாலு தலைமையில் பத்துப் பேர் கொண்ட தமிழகத்தைச் சார்ந்த தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி எம்.பிக்கள் இன்று சனிக்கிழமை இலங்கைக்கு வருகின்றனர்.

தி.மு.கவின் டி.ஆர்.பாலு, கனிமொழி, டி. கே.எஸ்.இளங்கோவன், ஏ.கே.எஸ்.விஜயன், ஜெலன் டேவிட்சன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தொல். திருமாவளவன், சுதர்சன நாச்சியப்பன் மற்றும் என்.எஸ்.வி.சித்தன், கே.எஸ்.அழகிரி, ஜே.எம்.ஹாரூண் ஆகிய பத்துப் பேர் கொண்ட குழு ஐந்து நாள் பயணமாக இலங்கைப் பயணத்தை மேற்கொள்கின்றார்கள்.

இவர்கள் வவுனியா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களைப் பார்வையிடுவார்கள் என்றும் பின்னர் ஜனாதிபதி ராஜபக்ஷவைச் சந்தித்துக் கலந்து பேசுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஆனால் இக் குழுவில் ம.தி.மு.க., அ.தி. மு.க. உள்ளிட்ட வேறு எந்தக் கட்சி உறுப்பினர்களும் இல்லை என்பதோடு சுதந்திர ஊடக இயக்கங்கள் இப் பயணத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை 14 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருக்கும் இவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடனும் பேசவுள்ளனர். (ச-3,5,14)

**scooty pep விற்பனைக்கு**

அலுவலரின் தனிப்பாவனையிலுள்ள சிவப்பு நிற ஸ்கூட்டிப் பெப்(பழைய வகை) உடன் விற்பனைக்குண்டு. JG தொடரிலக்கம் 7500 km ஓடியது. விலை 98500/= 396,நாவலர் வீதி,கைலாயப்பிள்ளையார் கோயிலடி,பழைய உதயன் ஒழுங்கை யாழ்ப்பாணம். சனி ,ஞாயிறு மு.ப.10-12 மணிவரை மட்டுமே பார்வையிடலாம். விலை தொடர்பான எந்தவித விசாரணைகளும் உரையாடப்படமாட்டா. (C-3476)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.10.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.